
பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. 169 தனி விலை அணா ஒன்று.





| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1—12 |

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய- வூ ஆனி-மீ 27-உ (11—7—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 11.



## உண்மையான கதர்!

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன், காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

## சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள். பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு). 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இஞ்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி திணுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக திணுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான திணுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

**மஹா சந்தனாதி தயிலம்.**

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்துகொண்டே யிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0
12 அவு. பாட்டல் ரூ. 2—2—0
வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

**சாலாமிசிரி லேகியம்.**

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0
வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,
தெப்பக்குளம் போஸ்டு திருச்சிராப்பள்ளி.

பண்டித எஸ் எஸ். ஆனந்தரின

**மஹாசந்தனாதித்தைலம்.**

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐகோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை எமது மருந்து விலைப்பட்டியின் கன்மதிப் பிரதியில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

## ஓர் வினா.

தமிழ் நாட்டுத் தலைவர் திரு. டாக்டர், பி. வரதராஜுலு நாயுடு அவர்களுக்கு.

அன்பார்ந்த தலைவரே! வணக்கம்.

தாங்கள் குருகுலப் போர் நடத்தி வந்த போது, தங்களை எதிர்த்து தங்கள் மீது வசை புராணம் பாடி வந்தவரும் 'செல்லாக் காசு' என்று "தமிழ் நாடு" வால் திருநாமம் சூட்டப்பட்டவருமான, திரு. ஆதிநாராயணச் செட்டியார், வட ஆற்காடு ஜில்லாவிற்கு சட்ட சபை அபேட்சகராக மீண்டும் வைஷ்ணவக் கட்சியின் தலைவராகிய திரு. சீனிவாச அய்யங்காரால் நிறுத்தப்பட்டிருக்கின்றார் என்பதை தாங்களறிந்தேயிருப்பீர்கள். அச்சமயம் தாங்கள் காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராக விருந்தும், 'செல்லாக் காசை' வட ஆற்காடு ஜில்லாவில் நிற்க இடங் கொடுத்து விட்டீர்களென்றே எண்ண வேண்டியிருக்கிறது. அதற்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றும், அது திரு. சீனிவாச அய்யங்கார் ஏகச்சாதிகாரமென்றும், தாங்கள் ஒருக்கால் சொல்லக்கூடும். அஃதுண்மையேயாயினும், தாங்கள் குருகுலப்போர் நடத்தி வந்த போது 'செல்லாக்காசு' செட்டியார் சுந்த ஜில்லாவில் அபேட்சகராக நிற்கின்றரோ, "அச்ஜில்லாவில் ஓட்டர்கள் வீடுதோறும் சென்று, 'செல்லாக்காசை' எதிர்த்து தோல்வியுறச் செய்வேன்" என்று கர்ஜித்ததை இது சமயம் மறந்திருக்க மாட்டீர்கள். அதற்காக இதுகாறும் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இனி தங்களுடைய உத்தேசம் என்ன வென்பதை அறிய மிகவும் ஆவலுள்ளவனாயிருக்கிறேன். தயை கூர்ந்து விடை அளிக்க வேண்டுகிறேன்.

க. ஆ. வேலு கவுண்டர்,
கண்ணமங்கலம்.

## தூய்மை பெறும் திருமணம்.

வட ஆற்காடு ஜில்லா ஆம்பூர் சார்நிங்குப்பத்திலிருக்கும் திரு. ரா. வெங்கிடசாமி முதலியாரின் புதல்வரும், திரு. வெ. மாணிக்க முதலியாரின் இளவலுமாகிய திரு. அழகப்ப முதலியாருக்கு 11-7-26-ல் திருமணம் நடப்பதாய் அழைப்பும் கீழ்கண்ட விண்ணப்பமும் கிடைத்தது.

அன்புள்ள ஐயா, இத்துடன் என்னுடைய தம்பியின் மண அழைப்பு அனுப்பியிருக்கிறேன். அம்மணத்தை பணமக்கள் இனத்தைச் சேர்ந்த வேளாளரையே குருவாக வைத்து நடத்தக் கருதியிருக்கிறேன்................ இதே முறையைப் பின்பற்றி என் உறவினர்களுள் வேறுசில மணங்களும் இதே நாளில் நடக்க ஏற்பாடாய்க் கொண்டிருக்கிறது. பெருங்கழக நோக்கத்தை வழக்கத்திற்குக் கொண்டுவந்து பரவச் செய்வதற்காகவும் அவ்வழியில் முயலும் என்னைப்போன்றவர்களுக்கு ஊக்கம் உண்டு பண்ணுவதற்காகவும் தாங்களும் அந்நோக்கத்தில் கருத்துள்ள தங்களுக்குத் தெரிந்த பிற நண்பர்களும் தவறாது வரவேண்டுமென்று மற்றோர்முறை வேண்டிக்கொள்கிறேன்.— வெ. மாணிக்க முதலியார்,

இம்முறையை நாம் போற்றுகிறோம். தமிழர் அனைவரும் இம்முறையைக் கையாளுவரேல் தமிழகத்திற்கும் தமிழ் மக்கட்கும் அவர்தம் பின் சந்ததிகளுக்கும் பெருநலம் பயக்கும் என்பதை நாம் கூற வேண்டியதில்லை. இத்தகைய மணமுறைகள் பார்ப்பனரல்லாதார் இயக்கங்கிளம்பிய பின்னர் சிறிது சிறிதாகப்பரவிவருகின்றன. பார்ப்பன புரோகிதர்களை நம்பி தங்கள் சுயமரியாதையை இழந்து வருவதை, தமிழ் மக்கள் நாளடைவில் உணர்ந்து கொள்வார்களென்பதை இம்முறைகள் உறுதிப்படுத்துவதாகும். ப—ர்.

**ஆனந்த குணபோதினி**

ஒரு நூதன உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை

பிரசித்த அநுபவஞான சாஸ்திரி இதன் ஆசிரியராய் விளங்குகிறார்.

இத்தகைய நவீன ஸஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. சித்திரப்படங்களுடன் திகழ்வது. கல்விச் செல்வம், பொருட்செல்வம் பெருகி இன்பம் தங்குதற்குரிய வியாசங்களால் ஒளிர்வது. அறிவை விளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. நன்னடக்கையும், லௌகிக யுக்தியும், பாஷை ஞானமும், தேசாபிமானமும், ஈசுவர பக்தியும், ஆழ்ந்த யோசனையையும் உண்டாக்கக் கூடியது. எல்லா மதஸ்தர்களுக்கும், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றது. சொல் நயம் மிகுந்து தமிழ் உலகமெல்லாம் ஜொலிக்கும் படியாயிருப்பது "ஆனந்த குணபோதனி"தான். ஆடவர், மகளிர், பெரியோர், சிறியோர், எவர் கையிலும் இப்பத்திரிகையை இனிக் காணலாம்.

இதில் "ஆனந்த தரிசனம்" "பழமொழிக் குறிப்புகள்" "பத்திரிகா சாரம்" "பெண்கள் பக்கம்" "பிரபஞ்ச தரிசனம்" "விகடப் பிரதாபன்" "சென்ற மாதம்" என்ற தலைப் பெயர்களின் கீழ்வரும் ஒவ்வொரு விஷயங்களும் சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய அலங்கார வசனமழையாய் விளங்கும். இப்பத்திரிகையே எவ்விஷயத்திலும் வெகு சிறந்ததென்பதை தங்களுடைய அநுபவத்தில் தாங்களே அறிந்து கொள்ளலாம். ஆனந்த குணபோதினியின் சொற்ப சந்தாவை உற்று நோக்குங்கள். வருஷச் சந்தா ரூபாய் ஒன்றே (ரூ-1) இன்றே எழுதுங்கள், உடனே சேருங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
புரோப்ரைட்டர், "ஆனந்த குணபோதினி" ஆபீஸ்,
302, தங்கசாலைவீதி, சென்னை.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# இந்து முஸ்லீம்

## அபிப்பிராய பேதங்களும் கலகங்களும் ஏற்படக் காரணம் என்ன?

தேசத்தின் விடுதலைக்காக வென்றும் சுதந்திரத்திற்காக வென்றும் படித்த வகுப்பார்களால் (பார்ப்பனர்களால்) கிளர்ச்சி ஏற்படும்போதெல்லாம் இந்து முஸ்லீம் கலவரங்களும் அபிப்பிராய பேதங்களும் ஏற்படாமலிருப்பதில்லை.

ஆனால் மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் ஏற்பட்டிருந்த ஒத்துழையாமையின் போது மாத்திரம் கலவரமும் அபிப்பிராய பேதமும் இல்லாமல் இருந்ததோடல்லாமல் நாம் அறிய இதுவரை நமது நாட்டில் ஏற்பட்டிராத இந்து முஸ்லீம் பரஸ்பர நம்பிக்கையும் அபிப்பிராய பேதமின்மையும் ஒற்றுமையும் சகோதரத் தன்மையும் தலைசிறந்து விளங்கிற்று.

ஆனால் இதற்கு சில பொறுப்பற்றவர்கள், அது சமயம் மகமதியர்களுக்குக் கிலாபத் சங்கடம் இருந்ததால் அவர்கள் இந்துக்களோடு ஒத்திருந்தார்கள் என்ற உள் எண்ணம் கற்பிக்கிறார்கள். அதற்கு ஒரு சிறிதும் ஆதாரமில்லை என்றே சொல்லுவோம். ஒத்துழையாமை மகாத்மாவினால் அமுலில் ஆரம்பிக்கும் காலத்திலேயே கிலாபத்து விஷயம் பெரும்பாலும் முடிவடைந்து விட்டது.

அன்றியும் துருக்கி நாட்டில் கமால்பாஷாவின் ஆதிக்கம் ஏற்பட்டதும் கிலாபத்து விஷயம் வெளிநாட்டு மகமதியர்களால் கைவிடப்பட்டும் போய் விட்டது. ஆகவே, மகமதியர்கள் அந்த எண்ணம் கொண்டே இந்துக்களோடு கலந்திருந்தார்கள் என்று சொல்ல முடியாது. அப்படி இருக்க, ஒத்துழையாமையின் போது மாத்திரம் ஏன் தேசத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டது, மற்ற காலங்களில் ஏன் கலவரமேற்படுகிறது என்று ஒவ்வொரு இந்து முஸ்லீமும் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

படித்தவர்கள் என்று சொல்லப்படும் வகுப்பினரான பார்ப்பனரும் மற்றையோரும் தேசியக் கிளர்ச்சி என்கிற பெயராலும் காங்கிரஸ் என்னும் பெயராலும் செய்து வந்த காரியங்களெல்லாம் தன் வகுப்பாரின் சுய நன்மையைக் கோரியும் அதில் கலந்த மற்றவர்களும் தங்கள் தங்கள் தனித்த நலத்திற்காகவும் உழைப்பதாயிருந்ததால், மற்ற வகுப்பார்கள் தாங்கள் அக் கிளர்ச்சியில் சம்மந்தப்படவில்லை என்று காட்டிக் கொள்வதற்காகவும், அக் கிளர்ச்சியின் பயனாய் அவ் வகுப்பாருக்கு ஏதாவது பதவியோ நிர்வாக அதிகாரமோ ஏற்படுமானால் அவை தங்கள் சமூகத்திற்கு (முஸ்லீம் சமூகத்திற்கு) சரியான பங்கு அளிக்கப்படாமல் போவதோடு, ஒரு சமூகம் மாத்திரம் முன்னேறிவிட்டால் மற்ற சமூகம் அதனால் அழுத்தப்பட நேரிடும் என்றும் பயந்தே, முட்டுக்கட்டையாய் நிற்க நேர்ந்தது. அதே காரணம்தான், வங்காள பிரிவினையின் போது முஸ்லீம்கள் இந்துக்களிடம் நம்பிக்கை கொள்ளாதிருந்ததும், பிறகு லக்னோ காங்கிரசில் முஸ்லீம்கள் இந்துக்களை நம்பும்படியாக ஒப்பந்தமும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் ஏற்றுக்கொண்டதால் இந்துக்களிடம் அவநம்பிக்கையில்லாமலிருந்ததும், எல்லோரும் அறிந்த விஷயம்.

பின்னும் ரௌலட் சட்டத்தின்போது ஏற்பட்ட கிளர்ச்சியில் முஸ்லீம்கள் கலந்து கொண்டு மகாத்மாவோடு ஒத்துழைத்ததற்குக் காரணம், மகாத்மா முஸ்லீம்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதோடு இரு சமூகத்திற்கும் சமத்துவமாய் விடுதலையளிக்கத் தக்க திட்டங்களோடும் உழைத்ததாலும் மகாத்மா திட்டங்களில் எது நிறைவேறினாலும் அது பெரும்பாலும் முஸ்லீம்களுக்கும் சம பாகம் கிடைக்கக் கூடியதாகவும், ஒருவரை ஒருவர் மோசம்செய்ய முடியாததுமான திட்டங்களாய் இருந்ததாலும் அவற்றில் யாரும் சந்தேகப்படுவதற்கே வழியில்லாமல் போனதோடு இத் திட்டங்கள் நிறைவேறக் கூடிய நிலைமையிலும் இருந்தது.

அந்தப்படி மகாத்மா திட்டங்கள் முழுவதும் நிறைவேறிவிட்டால், சில. வகுப்பார் முக்கியமாய் பார்ப்பனர்கள் இப்போது அனுபவிக்கும் அதிக சுதந்திரமும், ஏகபோக ஆதிக்கமும் அனுபவிக்க முடியாதாகையால், இத் திட்டங்களுக்கு விரோதமாய் பார்ப்பனர்கள் கிளம்ப வேண்டியதாயிற்று. இதன் பலனாக தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் வடநாட்டுப் பார்ப்பனர்களாகிய பண்டித மாளவியாவையும் மகாராஷ்டிரப் பார்ப்பனரையும் தூண்டிவிட்டு அவர்களுக்கு உடந்தையாயிருந்து, மகாத்மாவையும் அவரது திட்டத்தையும் எதிர்க்கவேண்டியதாயிற்று.

மகமதிய சமூகம் எண்ணிக்கையில் மிகுந்திருக்கிற மாகாணமாகிய பஞ்சாபும், வங்காளமும் இத்துடன் சேரவேண்டியதாயிற்று. லாலா லஜபதிராயும் தேசபந்து தாசும் மகாத்மாவையும் அவரது திட்டத்தையும் எதிர்க்கவும் அழிக்கவும் நேர்ந்தது இந்த இரகசியத்தை அறிந்த பின்புதான். மகாத்மாவின் முதல் சிஷ்யராகவும் சட்டாம்பிள்ளையாகவுமிருந்த ஸ்ரீமான் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரும் கடைசியாக அவர்களுக்கு உள்ளாளாயிருந்ததின் இரகசியமும் இந்த உணர்ச்சி ஏற்பட்டதனால் தான். இந்த இரகசியம் வெளியாகாமலிப்பதற்கு- "பார்ப்பனர்கள் கூடி இப்படிச் செய்கிறார்கள்" என்பதை பொது ஜனங்கள் அறியாமலிருப்பதற்கு- தேசபந்து தாசைத் தலைவராக்க வேண்டிய அவசியம் நமது பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டது. நமது மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைக் கொல்ல - ஜஸ்டிஸ் கட்சியைக் கொல்ல-பார்ப்பனரல்லாதாரிலேயே முதலியார் என்றும், பிள்ளை என்றும், செட்டியார் என்றும், நாயுடு என்றும், நாயக்கர் என்றும், பாவலர் என்றும், சாயபு என்றும் அப்போதைக்கப்போது எப்படித் தலைவர்களை சிருஷ்டித்துக் கொள்ளுகிறார்களோ அதுபோல் இந்தியாவுக்கே தேசபந்துவைத் தலைவராக்கி அவருக்கு வேண்டிய விளம்பரம் கொடுத்து அவர் கையாலேயே ஒத்துழையாமைக்குக் கொள்ளி வைக்கச் செய்து அவர் வாயாலேயே ஒத்துழைப்பை வெளியாக்கச் செய்து ஒத்துழையாமையும் தேசபந்துவும் மறைந்த பிறகு வார்த்தைக்கு வார்த்தை ஒத்துழையாமையையும் தேசபந்து பெயரையும் சொல்லிக் கொண்டு தங்கள் ஜாதி ஆக்கம் பெற வேட்டை ஆடுகிறார்கள்.

மகாத்மாவையும் அவர் திட்டத்தையும் ஒழிக்கவே பண்டித மாளவியா இந்து முஸ்லிம் கலகத்தை ஆரம்பிக்கக் கருதி இந்து மகா சபை என்று கிளப்பினார். ஒத்துழையாமைக்கு சில முஸ்லிம்கள் அனுகூலமாயிருந்ததால் அவர்களில் சிலரைக் கலைத்துத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளுவதற்காகவே சென்னையில் சில ஜனாப்களை ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் சேர்த்துக் கொண்டது போல் வங்காளத்தில் சில ஜனாப்களையும் மௌல்விகளையும் சுவாதீனப்படுத்த வகுப்புவாரிப்பிரதிநிதித்துவங் கொண்ட வங்காள இந்து முஸ்லிம் ஒப்பந்தமொன்றை தேசபந்து தாஸ் ஏற்படுத்தினார். இவ்வொப்பந்தத்தை தேசபந்து காக்கினடா காங்கிரசில் பிரேரேபித்தபோது இதை ஆமோதித்தவர் யாரென்று வாசகர்கள் அறிய ஆசைப்படுவார்கள். ஆமோதித்தவர் யாரென்றால் தமிழ் நாட்டுக் காந்தியாகிய ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியாராகும். எந்த இராஜகோபாலாச்சாரியார் என்று கேட்பார்களேயானால் "வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இந்தியாவுக்குக் கூடாது; அது ஒற்றுமையையும் விடுதலையையும் அழிக்கும்; வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது பார்ப்பனர்களை நசுக்குவதற்காக ஏற்பட்டது", என்பது போன்ற பத்து கற்பனைகள் எழுதி வருகிறாரே அந்த ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார்தான். இன்னும் கொஞ்சம் விவரமாய்த் தெரியவேண்டுமானால் நமது நாட்டில் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டபோது அதற்கு எதிரிடையாய்ச் சில பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே சென்னை மாகாணச் சங்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி அதில் தாங்களும் கலந்து கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் எங்களுக்கு ஆக்ஷேபனையில்லை. ஆனால் அரசியலில் காங்கிரசை ஏற்றுக்கொண்டால் போதும் என்று சொல்லியும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அப்போது ஒப்புக்கொண்டு காங்கிரஸ் திட்டத்திலும் தேசிய சங்க (நேஷனலிஸ்ட் கான்பரன்ஸில்)த்திலும் பார்ப்பனரல்லாதாருக்கு இத்தனை ஸ்தானம் என்றும் இத்தனை ஸ்தானங்களுக்குக் குறையாமல் என்றும் வேலைத்திட்டம் வெளியாக்கி விட்டு இப்போது பார்ப்பனரல்லாதாருக்குள் கலகம் ஏற்படுத்தி அவர்களுக்குள் ஒற்றுமைக் குறைவு உண்டாகும்படி செய்துவிட்டு "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேசத்தைக் கெடுக்கும் பிசாசு" என்கிறாரே அந்த ஸ்ரீமான் ராஜகோபாலச்சாரியாரால் ஆமோதிக்கப்பட்டு, வேறு பல ஆட்களை விட்டு அதை தோற்கடிக்கச் செய்து இப்போது ஒத்துழையாமை அடியோடு நசுக்கப்பட்டுப் போனபின், கல்கத்தா ஒப்பந்தம் கூடாது என்று ஒரு கக்ஷியும், அதைப் பற்றி பேசவே கூடாது என்று ஒரு கக்ஷியுமாய் இருவரும் சேர்ந்து அதைக் கொல்ல நினைப்பதின் ரகசியமும் இதுதான். ஆகவே ஒத்துழையாமை ஒழிந்து விட்டதாலும் மகாத்மா தலைமை ஸ்தானத்தில் இருந்து விலகி விட்டதாலும் அந்த ஸ்தானங்களுக்கு

சுயநலமும் பார்ப்பன ஆதிக்கமும் வந்து மகமதிய சமூகத்திற்கு இதற்குமுன் ஏற்பட்டிருந்த நன்மைகளையும் அழிக்க சில முஸ்லீம்களை விலைக்கு வாங்கி அவர்களை உபயோகித்துக் கொள்வதாலும் அவநம்பிக்கையும் ஜாக்கிரதையும் மகமதிய சமூகத்திற்கு அவசியமாகிவிட்டது. இதன் பலனாய் எங்கு பார்த்தாலும் இந்து முஸ்லீம் கலகங்கள் ஏற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுப் போய்விட்டது. ஒரு பக்கம் பண்டித மாளவியா "உரிமை, உரிமை" என்று சொல்லிக் கொண்டு இந்துக்களுக்கு முஸ்லீம்கள் பேரில் ஆத்திரம் உண்டாகும்படி பிரசாரம் செய்வதும் இதை எதிர்க்கவேண்டி மற்றொரு பக்கம் மகமதிய தலைவர்கள் என்போர் "மதம் மதம்" என்று சொல்லிக்கொண்டு இந்துக்கள் மீது துவேஷம் உண்டாகும்படி பிரசாரம் செய்வதுமாய் ஏற்பட்டுப் போய்விட்டது. இருவர் சொல்லிக்கொள்ளும் உரிமையிலும் மதத்திலும் உண்மையான தத்துவம் இருப்பதாக நாம் நினைக்கவில்லை. பசுக் கொலையைப் பற்றி இந்துக்கள் முஸ்லீம்களை உபத்திரவிப்பது அனாவசியமென்றே கருதுகிறோம். முஸ்லீம்கள் பசுக்கொலை செய்வதால் இந்துக்களுக்கு என்ன கஷ்டமோ நஷ்டமோ இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்துக்களுக்கு எப்படி ஒரு ஆட்டையோ கோழியையோ பன்றியையோ விலை போட்டு வாங்கி வளர்த்துக் கொன்று தின்பதற்கு பாத்தியமுண்டோ, அதுபோல் முஸ்லீம்களுக்கும் பசுவையோ ஆட்டையோ கோழியையோ விலை போட்டு வாங்கிக் கொன்று தின்னப் பாத்தியமுண்டு. இப்படி இருக்க முஸ்லீம்களுக்கு மாத்திரம் ஒரு ஜெந்து விஷயத்தில் நிர்பந்தம் ஏற்படுத்துவதின் பொருள் என்ன? மாடு சாப்பிடுவதும் மாட்டைக் கொல்லுவதும் நமது தேசத்தில் முஸ்லீம்கள் மாத்திரம் செய்யவில்லை. நமது நாட்டில் பஞ்சமர் என்று சொல்லுவோரில் கோடிக்கணக்கான பேர்கள் அப்படியே செய்கிறார்கள். நாம் இப்போது எந்த அரசாங்கத்தின் கீழ் இருக்கிறோமோ அந்த அரசாங்கமே மாடு தின்கிற வகுப்பைச் சேர்ந்தவர்கள். அதைப்பற்றி நாம் ஒரு சிறிதும் கவலைப்படுவதில்லையே. முஸ்லீம்களும் பஞ்சமர் என்று சொல்லுவோர்களும் பெரும்பாலும் ஏழைகளாயிருப்பதால் முறையே வயதாகி சாகப்போகும் மாடுகளையும், செத்த மாடுகளையும் உபயோகிக்கிறார்கள். நம்மை ஆளும் ஜாதியாரோ நல்ல வாலிபமுள்ளதாய் - காத்திரமாய் - உழைக்கக்கூடியதாய் - அழகுள்ளதாய்ப் பார்த்து வாங்கிக் கொன்று சாப்பிடுகிறார்கள். நமது நாட்டிலிருந்து வருஷம் ஒன்றுக்கு 10 லக்ஷக் கணக்கான மாடுகளையும் பசுக்களையும் விலை போட்டு வாங்கிக் கப்பலேற்றி மேல் நாட்டிற்குக் கொண்டு போகிறார்கள். இவைகள் எதற்காகக் கொண்டு போகப்படுகிறது? ஐரோப்பா தேசத்தில் பசுமடம் கட்டப்பட்டிருக்கிறதா. அல்லது உழவு வேலைக்காவது பாரம் இழுக்கும் வேலைக்காவது கொண்டு போகிறார்களா? கொன்று தின்பதற்குத்தான் என்று நமது பார்ப்பனர்களுக்குத் தெரியாதா? இதனால் இந்த ராஜாங்கத்தை ஒழித்து விட்டோமா? அல்லது வேறு மாடு தின்னாத தேசத்திற்குக் குடி போய் விட்டோமா? பஞ்சமர்கள் என்று சொல்லுவோரையாவது மாடு தின்னும் காரணத்திற்காக, இந்துவல்ல என்கிறோமோ? நமது அரசாங்கத்தாரும் நமது மதத்தாரும் செய்யும் காரியத்தை, முஸ்லீம்கள் செய்தால் மாத்திரம் அவர்களோடு கலகத்திற்குப் போவது என்பதின் இரகசியம் என்ன? அல்லாமலும் ஒவ்வொரு பட்டணங்களிலும் முனிசிபாலிட்டியிலும் மாடு அறுப்பதற்கென்றே தனித் தொட்டியும், மாட்டு மாம்சம் விற்பதற்கென்றே தனி கசாப்புக் கடையும் ஏற்பாடு செய்து கொடுத்து அதினால் நாம் பணம் சம்பாதிக்கவில்லையா? இவ்வளவு காரியங்கள் நடக்கும்போதும் இவற்றிற்கு நாம் உடந்தையாய் இருக்கும்போதும் பசுக்கொலை என்பதற்குப் பொருள் என்ன? அது போலவே மசூதி முன் மேளம் என்பதும் பொருளற்றதாகவே இருக்கிறது. ஒரு வகுப்பார் தங்கள் பள்ளியில் சுவாமியைத் தொழுவதானால் மற்றொரு வகுப்பார் தெருவில் மேளமடித்துக்கொண்டு போகக்கூடாது என்பது கொஞ்சமாவது வாதத்திற்குப் பொருத்தமானதல்ல. இது நமது பார்ப்பனர்கள் தங்கள் வீதியில் மற்ற வகுப்பார்களை நடக்கக் கூடாது என்று சொல்லுவதை போலவே இருக்கிறது. ஒருவர் தொழுகைக்கும் மற்ற வகுப்பார் மேளத்திற்கும் என்ன சம்பந்தம்? மேளமடிப்பதால் கடவுளை வணங்குவதற்கு முடியாமல் போய்விடுமென்று சொல்லுவதானால் அந்த வணக்கத்திற்கு மதிப்பு ஏது? அநேக பள்ளிவாசல்கள் சந்தைக்குப் பக்கத்திலும் அதிகமான ஜனப் புழுக்கம், கூச்சல், வண்டிப் போக்கு வருத்து முதலியவைகள் உள்ள தெருவிலும், சதா டிராம் வண்டி ரயில் வண்டி, மோட்டார்கள் முதலியன கத்திக்கொண்டு போகும் வழிகளிலும் சமுத்திர அலை சதா சர்வகாலம் இரைச்சல் போட்டுக்கொண்டிருக்கும் ஸ்தலங்களிலும், பள்ளிவாசல்களும் தொழுகைகளும் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. பள்ளிவாசல்களுக்குப் பக்கத்தில் உள்ள இந்து கிருஸ்தவர்கள் முதலிய வீடுகளிலும் கோவில்களிலும் கலியாணம், சாவு, உற்சவம் முதலியவைகள் மேளத்தோடும் வாத்தியத்தோடும் நடைபெற்றுக்கொண்டுதான் இருந்து வருகின்றன. இவைகளையெல்லாம் ஆக்ஷேபிக்கப்படுவதில்லை; ஆக்ஷேபிக்க முடிவதும் இல்லை. இப்படியிருக்க தெருவில் மாத்திரம் வாத்தியத்தோடு போகக்கூடாது என்பது இன்னாம் பள்ளிக்கு இந்துக்கள் மரியாதை செய்யவேண்டும் என்று எதிர்ப்பதாகத்தான் ஏற்படுமே அல்லாமல் தொழுகைக்கு விரோதம் என்று சொல்லுவதில் பொருளே இல்லை. இம்மாதிரி பொருளற்ற இரு விஷயங்களைத் தங்கள் தங்கள் சுய நலத்திற்காக உபயோகப்படுத்தி பாமர ஜனங்களைக் கிளப்பிவிட்டு கலகங்களை உண்டாக்கி லாபமடைகிறார்கள்.

இது நிற்க, சிலர் தென் இந்தியாவில் இவ்வித கலகம் இல்லை என்று சொல்லிக்கொண்டும், அதற்குக்காரணம் இந்து ஜனங்கள் பரஸ்பரம் ஒற்றுமையோடிருப்பதாக சொல்லியும் பாசாங்கு செய்து கொண்டும் அவ் வகுப்புக்கு எவ்வளவு கெடுதி செய்யலாமோ அவ்வளவும் செய்து வருகிறார்கள். தென் இந்தியாவில் கலகம் இல்லாதிருப்பதற்கு இந்து முஸ்லீம் பரஸ்பர நம்பிக்கையும் ஒற்றுமையும் ஒருக்காலும் காரணமே அல்ல. முஸ்லீம்களின் எண்ணிக்கைக் குறைவும் இந்துக்கள் எண்ணிக்கை அதிகமும்தான் முக்கிய காரணம். அப்படிக்கில்லாமல் சம எண்ணிக்கையோ அல்லது இப்போதிருப்பதைவிட இன்னும் ஒரு பங்கு அதிகமாகவோ இருந்திருந்தால், தென்னாட்டு இந்து முஸ்லீம் ஒற்றுமை தெரிந்திருக்கும். நமது பார்ப்பனர் தங்கள் பணத் திமிரால் இரண்டொரு மகமதியரை விலைக்கு வாங்கி அவர்களைக் கொண்டு இந்துக்களின் ஓட்டுப்பெற இந்து விக்கிரகங்களை வணங்கச் செய்வதும் நெற்றியில் விபூதி குங்குமம் அணியச் செய்வதும் முஸ்லீம் சமூக நன்மைக்கும் மத உரிமைக்கும் விரோதமாய் அவர்களை பேசச் செய்வதும் எவ்வளவோ கஷ்டப்பட்டு சம்பாதித்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வேண்டாம் என்று சொல்லச் செய்வதுமாய் நடந்து கொண்டிருந்தால் யார்தான் சகிப்பார்கள். இது எல்லாம் அடியோடு தப்பு என்று நாம் சொல்லவில்லை. ஆனாலும் சரியோ தப்போ, அவரவர்களுக்கு அவரவர் மதக் கொள்கையும் அவரவர் நம்பிக்கையுமேதான் பிரதானமே தவிர வேறொருவரின் உபதேசம் பிரதானமல்ல. ஆதலால் நமது நாட்டில் முஸ்லீம் எண்ணிக்கைக் குறைவாயிருப்பதாலேயே அவர்களை எப்படி வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்ளலாம் என்று எண்ணினாலும் அதன் கர்ம பலனை அடையவேண்டி வந்தே தீரும். உண்மையிலேயே நமது பார்ப்பனர்கள் தாங்கள் முன்னால் ஒப்புக் கொண்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை இப்போது தங்களுக்குப் பலம் அதிகம் ஏற்பட்டு விட்டதென்கிற அஹம்பாவத்தால் எதிர்ப்பார்களேயானால், முன்னால் ஒப்புக் கொண்ட பார்ப்பனரல்லாதாரிலேயே சிலரை விலைக்கு வாங்கி அவர்களைக் கொண்டே விஷமப் பிரசாரம் செய்யச் செய்வார்களேயானால், முடிவில் இந்து முஸ்லீம் கலகமாத்திரமல்ல, பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கலவரம் கோஹட், கல்கத்தா முதலிய இடங்களைப் போலும் அதற்கு மீறியும் கலவரம் நடந்துவிடுமோ என்று கவலைப்படுகிறோம். ஆனால் இவ்வளவு அக்கிரமங்கள் செய்யப்பட்டும் இன்னும் நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று சிலர் கருதுவார்கள். இதன் இரகசியங்களும் சூழ்ச்சிகளும் இன்னும் பொதுஜனங்களுக்கு முழுதும் தெரியத்தக்க காலம் ஏற்படவில்லை. அல்லாமலும் பார்ப்பனரைப் போல் சில ஆட்களை விலைக்கு வாங்கி வசப்படுத்திவிட பார்ப்பனரல்லாத இதரர்களும் முஸ்லீம்களும் இன்னும் மனம் துணியவில்லை. பாவ புண்ணியத்தை மதிக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட சமயம் வரும் காலத்தில் இப்போது நமது பார்ப்பனர்களுடன் திரிபவர்களும் அவர்களால் தலைவர்களானவர்களும் அவர்களை கை விட்டு விட்டு அவரவர்கள் வகுப்போடு சேர்ந்துகொள்ளுவார்களே தவிர இவர்களுக்கு உதவியாய் வர மாட்டார்கள்; வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது என்கிற சத்தியத்தை இப்போதே உணர்வது நலம் என்றே நினைக்கிறோம்.

# திரு. வெங்கட்டரமணய்யங்காரின் குட்டு வெளிப்பட்டது.

## கிணத்துக்கடவு தென்னந்தோப்பில் கள் முட்டி கட்டவில்லை என்று முன் வந்து ரூபிப்போருக்கு 101 ரூபாய் இனாம்!

(கோவை திரு. அ. அய்யாமுத்துக் கவுண்டர் எழுதுகிறார்.)

சென்னை சட்டசபை மெம்பர் ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமண அய்யங்கார் அவர்களுடைய கிணத்துக்கடவுத் தென்னந்தோப்பில் கள் முட்டிகள் தொங்குவதைத் தான் 20-2-26-ல் நேரில் கண்டதாக ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தமது "குடி அரசு"ப் பத்திரிகையில் 18-4-26-ல் எழுதியிருந்தார். இப்பத்திரிகை வெளியான சின்னாட்களுக்குப்பின்பு யான் கிணத்துக்கடவுத் தோப்பைப் பார்வையிட்டேன். அங்கு கள் முட்டிகள் காணப்படவில்லை. நாயக்கர் பார்த்தது பொய்யென்று தீர்மானம் செய்து கொண்டேன்.

2-5-26-ல் யான் கோவைக்குச் சென்றிருந்தேன். ஸ்ரீமான் அய்யங்கார் என்னைக் காண விரும்புவதாக எனது நண்பர் ஸ்ரீமான் சப்ரி (சி. கே. சுப்ரமண்யம், கோவை ஜில்லா காங்கிரஸ் காரியதரிசி) என்னிடம் சொன்னார். அவரும் யானும் அன்று பகல் அய்யங்கார் வீட்டுக்குப் போயிருந்தோம். "பார்த்தீரா, நாயக்கர் எத்தகைய பொய்யை எழுதியிருக்கிறார்! இன்று யான் உடுமலைக்குப் போகிறேன். என்னோடு நீங்களும் வாருங்கள். போகும் மார்க்கத்தில் கிணத்துக்கடவு தோப்பை நேரில் பார்வையிடுவோம்" என்று என்னிடம் சொன்னார்.

"நான் அதைப் பார்த்தாய் விட்டது. நாயக்கர் எழுதியது பொய்தான். அவரிடமிருந்து யாரேனும் அபிப்பிராயப் பேதப்பட்டால், அபிப்பிராயத்தை மட்டும் கண்டியாமல் ஆளையே கன்னாபின்னமாகக் காய்கிறார். அது எனக்குப் பிடிக்கவில்லை. மற்றும் அவருக்கு யாவர்மீதும் சந்தேகந்தான். என்மீதுகூட இரண்டொரு முறை அவர் சந்தேகமுற்றிருக்கிறார். மற்றும் அவர் காங்கிரஸ் நிர்வாகப் பதவி வகித்துக்கொண்டே காங்கிரசுக் கெதிராய் வேலை செய்வதும் எனக்குப் பிடிக்கவில்லை. நீங்கள் கதருடுக்காமல், உடுப்பதாய்ப் பாசாங்கு செய்த காலத்தில் அவர் உங்களைக் கண்டிக்கவில்லை. நீங்கள் கள்ளுக்கு வாஸ்தவத்தில் மரங்கொடுத்த போதெல்லாம் சும்மா இருந்துவிட்டார். இப்போது இல்லாததை உண்டென எழுதுகிறார். வாஸ்தவத்தில் அவரிடத்தில் சத்தியாக்கிரக லட்சணங்கள் கொஞ்சமேனுமில்லை" என்று சொன்னேன்.

மற்றும் "நான் தங்களோடு சேர்ந்து உடுமலைக்கு வாமுடியாது. அவ்விதம் வந்தால் உங்களிடம் காசு வாங்கிக்கொண்டு உங்கள் பின்னால் திரிவதாக நாயக்கரும் அவர் போன்றவர்களும் சொல்லுவார்கள். நீங்களும், உங்கள் பெயரையும், உங்கள் பின்னால் திரிபவர் பெயரையுங் கெடுத்துவிட்டார்கள். எனக்கும் உங்களோடு வருவது கண்ணியமாய்த் தோன்றவில்லை" என்று சொன்னேன்.

"நீங்கள் என்னோடு வந்து ஒன்றும் செய்ய வேண்டுவதில்லை. நான் எப்படி வேலை செய்கிறேன் என்பதைப் பார்த்தால் போதும்" என்று ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் பற்கள் முழுவதையுங் காட்டிய வண்ணமாய்ச் சொன்னார். நான் முடியாதென்று சொல்லிவிட்டுத் திரும்பிவிட்டேன்.

அன்றிரவு ஈரோட்டுக்குப் போயிருந்தேன். ஸ்ரீமான் நாயக்கரைக் கண்டேன். "நீங்கள் இம்மாதிரி எழுதியிருப்பது பிசகு. கள் முட்டிகள் இல்லை. ஒருக்கால் நீங்கள் பார்த்தது தெளுவு முட்டியாயிருக்கலாம். எதற்கும் நீங்கள் மறுப்பெழுதியாகவேண்டும்" என்று சொல்லிவிட்டு அந்தியூருக்குப் போய்விட்டேன். "அய்யாமுத்தும் அய்யங்கார் வலையில் சிக்கிய வயிற்றுச் சோத்துப் பக்தன்" என்று நாயக்கர் கண்டிப்பாய் என்னை அன்றிரவு முதற்கொண்டு நினைத்திருப்பார்.

### ஆனால் உண்மை என்ன?

சென்ற மாதம் அய்யங்கார் தோப்புக் குத்தகைதாரரைக் கண்டேன். "அய்யங்கார் தோப்பில் கள்ளுக்கு மரங் கொடுக்கக் கூடாது என்ற நிபந்தனையேதேனும் குத்தகைச் சீட்டில் காணப்பட்டிருக்கிறதா?" என்று கேட்டேன். சென்ற வருடம் 800 ரூபாயுக்கு அடைத்த தோப்பை இவ் வருடம் 1,100 ரூபாயுக்கு அடைத்திருப்பதாயும், அவருக் கிஷ்டமானால் யாதொரு தடையுமின்றி மரங்களைக் கள்ளுக்குக் கொடுத்துக் கொள்ளலாமென்றும், குத்தகைச் சீட்டில் யாதொரு நிபந்தனையுங் குறிக்கப்படவில்லையென்றும், அடுத்த அக்டோபர் மாதத்தில் மரங்களைத் தான் கள்ளுக்கு விடப்போவதாயும் என்னிடம் சொன்னார். அதற்கடுத்த தினமே இவ் விஷயமாக கோவை "மகாஜன நேசன்" பத்திரிகையில் ஸ்ரீமான் அய்யங்காருக்குப் பகிரங்கக் கடிதமெழுதினேன். அதற்கு நாளது வரை பதில் காணோம். பதில் எழுதமாட்டாரேன்றும் எனக்குத் தெரியும்.

நேற்றைய தினம் (5—6—26) கிணத்துக்கடவு சால்டு ஆப்காரி இன்ஸ்பெக்டரவர்களைத் தற்செயலாய்க் காண நேர்ந்தது. ஸ்ரீமான் வெங்கிட்டரமண அய்யங்காருடைய கிணத்துக்கடவுத் தோப்பில் கடைசியாக எப்போது கள் உற்பத்தி செய்யபபட்டதென்று அவரைக் கேட்டேன். 1926-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதி வரையிலும் கள்ளிறக்கப்பட்டதென்று சொன்னார். அவருடைய சிப்பந்தி யொருவனையும் தாம் சொன்ன தேதி சரிதானாவென்று கேட்டார். அச் சிப்பந்தியும் ஆமென்று ஒப்புக்கொண்டான்.

இவற்றிலிருந்து புலப்படும் உண்மையென்னவெனில் நாயக்கர் கூறும் 20-2-26ல் அய்யங்காருடைய கிணத்துக் கடவுத் தோப்பில் கள் முட்டிகள் தொங்கின, அதை நாயக்கர் பார்த்தது உண்மை, என்பனவேயாகும். அநியாயமாக நாயக்கரை கடிந்து கொண்டோமே யென வருந்தி அவ் வருத்தத்தைத் தெரியப்படுத்தவே இதை எழுதலானேன்.

கடைசியாக ஒரு பந்தயம். 1925 அக்டோபர் முதல் 1926 மாச்சு வரை ஸ்ரீமான் வெங்கட்ரமண அய்யங்காருடைய கிணத்துக் கடவு தென்னந் தோட்டில் கள் சம்மந்த மிருக்க வில்லையென்று யாரேனும் ரூபித்தால் அவருக்கு *101* ரூபாய் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.

# டாக்டர் கிச்சுலுவின் உபதேசம்.

முஸ்லிம்கள் அரசியலில் தலையிடக் கூடாது. நிர்மாணதிட்டத்தால் தான் ஒற்றுமை ஏற்படும்.

டாக்டர் கிச்சுலு கல்கத்தா இந்து முஸ்லிம் கலவரத்தைப்பற்றி சமாதானம் செய்யப் பிரசாரம் செய்வதில் மூன்று முக்கிய விஷயங்களைப்பற்றி சொல்லியிருக்கிறார்.

1. "இந்து முஸ்லிம் இருவரும் நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்ற வேலை செய்தாலொழிய ஒற்றுமை என்பது ஏற்படமுடியவே முடியாது".

2. "முஸ்லிம்கள் கட்டுப்பாடாய் இருக்கவேண்டும்".

3. "முஸ்லிம்கள் அரசியலில் தலையிடக் கூடாது".

என்று பேசியிருக்கிறார். (இது 5-7-26வ "மித்திரன்" 4-வது பக்கம் 5-வது கலத்தில் காணப்படுகிறது) இப்படியிருக்க, டாக்டர் கிச்சுலு அப்படிச்சொன்னார், இப்படிச்சொன்னார், மகமதியர்களை காங்கிரசில் சேரச் சொன்னார் என்று எழுதுவதின் பொருள் என்ன? பாமரமக்களை ஏமாற்றுவதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பது ராஜ தந்திரமாய்ப் போய்விட்டது. ஒன்று நிர்மாணத்திட்டம் அல்லது வகுப்புக் கட்டுப்பாடு; இரண்டிலொன்றுக்கு உழைக்கவேண்டுமே அல்லாமல் ஒரு வகுப்பை அழுத்தி, ஒரு வகுப்பு ஆதிக்கம் செலுத்த செய்யப்படும் சூழ்ச்சியாகிய பார்ப்பனக் காங்கிரசோ சுயராஜ்யக்கக்ஷியோ தேசத்துரோகத்திற்கும் மற்ற வகுப்புத் துரோகத்திற்கும் தான் உதவும் என்பதும் கண்ணை மூடிக்கொண்டு மக்கள் அதில் சேரக்கூடாது என்பதும் டாக்டர் கிச்சுலுவின் உபதேசத்தால் விளங்கி விட்டது. ஆதலால், இனியாவது மகமதியர்கள் போலிகளை நம்பி மோசம் போகாமல் கண் விழித்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

## இனியும் ஆதாரம் வேண்டுமா?

சட்டசபைத் தேர்தலுக்குப் பார்ப்பன ஆதிக்கத்திற்கென சுயராஜ்யக் கட்சியின் சார்பாக காங்கிரசின் பெயரால் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் கம்பெனியார் நிறுத்தும் அபேக்ஷகர்களைப்பற்றி அப்போதைக்கப் போது எழுதிவந்திருக்கிறோம். அவற்றுள் ஒரு சந்தர்ப்பத்தில் "ஜில்லாவிற்கு இரண்டொரு பார்ப்பனரல்லாதாரை நிறுத்தி பொது ஜனங்களுக்குப் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார் பெயரைத் தெரியும்படியாகச் செய்து கடைசியில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு பார்ப்பனர் பெயரைப் போட்டுவிட்டார்கள்" என்று எழுதியிருந்தோம். அது இப்போது நிஜமாகவே போய் விட்டது.

திருநெல்வேலி ஜில்லாவிற்கு ஒரு பார்ப்பனர் பெயரை நுழைத்தார்கள். அது ஸ்ரீமான் சாது கணபதி பந்துலுவின் பெயரேயாகும். மதுரை ஜில்லாவிற்கு இப்போது இரண்டு பார்ப்பனர்களை நிறுத்தத் திர்மானித்துவிட்டார்கள். அதாவது ஸ்ரீமான் முத்துராமலிங்கய்யரை ஒரு ஸ்தானத்திற்கு. மற்றொரு ஸ்தானத்திற்கு இப்பொழுது தான் மெள்ள வேறொரு பார்ப்பனர் தலையை நீட்டப்படுகிறது. அதாவது ஸ்ரீ கே. ஆர். வெங்கட்டராமய்யரேயாகும். திருச்சி ஜில்லாவிற்கும் ஒரு பார்ப்பனர் பெயர் நுழைந்து விட்டது. இன்னும் மற்றொரு ஆசாமியின் பெயரும் நுழையும் போலிருக்கிறது. சேலம் ஜில்லாவிற்கு இன்னும் ஒரு ஸ்தானம் பாக்கி இருக்கிறது. கடைசிகாலத்தில் ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார் பெயர் நுழையப்போகிறது. கடிதப் போக்கு வரவுகள் நடந்து கொண்டு தானிருக்கின்றன. தஞ்சை ஜில்லாவிற்குக் காலியாக வைத்திருந்த ஸ்தானத்திற்கு, நாம் முன் எழுதியபடியே, ஸ்ரீமான் ராவ்பகதூர் கே. எஸ். வெங்கட்டராமய்யர் பெயர் போட்டாகிவிட்டது. ஆனால் அங்கு இன்னும் இரண்டு பார்ப்பனர் சண்டை யிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, ஸ்ரீமான்கள் என். கிருஷ்ணசாமி ஐயங்கார், பந்துலு வெங்கட்டராமய்யர் ஆகிய இருவருமேயாகும்.

ஸ்ரீமான் பந்துலு வெங்கட்டராமய்யர் காங்கிரசுக்கு எவ்வளவோ உழைத்தவராயிருந்தும் அவரை வேண்டுமென்றே தள்ளி விட்டு, ஒரு பட்டதாரியாகவே பார்த்து நியமித்திருக்கிறார்களாம். ஏனெனில் பந்துலு ஐயர் மறுபடியும் ஒத்துழையாமையைக் கொண்டு வந்துவிடுவாரோ என்கிற பயந்தானும். ஸ்ரீ கே. எஸ். வெங்கட்டராமய்யர் பட்டம் விடப்போகிறார் என்று சமாதானமும் சொல்லுகிறார்கள். பட்டத்தை விட்டுவிடச்சொன்ன காலத்தில் விடவில்லை. அதற்கு மொத்தத்திலேயே யோக்கியதைக் குறைந்த பிறகும் ஸ்ரீமான முதலியார் ஜஸ்டிஸ் கட்சியில்சேர்ந்துகொள்வேன் என்று மிரட்டிய பிறகும் பட்டம் விடுகிறார்களாம். சீக்கிரத்தில் ஸ்ரீமான் முத்தையா முதலியார் பெயரும் அடிக்கப்பட்டு அதற்குபதிலாக ஸ்ரீமான் கிருஷ்ணசாமி ஐயங்கார் பெயர் எழுதப்படும் என்று ஒரு குருவி சொல்லுகிறது. எப்படியாவது ஸ்ரீமான் மருதவானம் பிள்ளை அவர்களின் பிரசாரத் தொகுதியில் இரண்டு மூன்று பார்ப்பனர் சட்டசபைக்குப்போகப்போகிறார்கள். ஸ்ரீமான் மருதவானம் பிள்ளை அவர்களின் பெரியோர்கள் எப்படி சம்பாதித்தார்களோ தெரியவில்லை, இவ்வித தர்ம கைங்கரியத்திற்குச் செலவாகிறது. இன்னமும் மற்ற ஜில்லாக்களிலும் இது போலவே ஒவ்வொரு பார்ப்பனர் பெயரை நுழைத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

காஞ்சீபுரம் மகாநாடு நடந்த சமயத்தில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்குத் தலைவர் பட்டம் சூட்டுவதில் ஸ்ரீமான்கள் நாயுடுகாரும் முதலியார்வாளும் போட்டி போட்ட போது சிலர் பார்ப்பனரே கூடாது என்றும், அதிலும் நமது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் கூடவேகூடாது என்றும் ஆக்ஷேபித்த காலத்தில் "என்னை நம்புங்கள், நான் எல்லாவற்றையும் சரிப்படுத்தி பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஜனத்தொகைக்குத் தக்கபடியே ஆள்களை நிறுத்துவதாக உறுதிகொடுக்கிறேன்," என்றும் சொல்லி உறுதிகொடுத்து, பார்ப்பனரல்லாதாரை ஏமாற்றி, ஐயங்காருக்குப் பட்டங்கட்டிய "வசிஷ்ட முனிவர்கள்" இன்று, ஐயங்கார் 'போடு குட்டிக்கரணம்' என்றால் 'சுவாமி எண்ணிக்கொள்ளுங்கள் இதோ போடுகிறேன்,' என்கிறார்கள். நாள் செல்லச்செல்ல பார்ப்பனர்களின் பெயர்கள் தான் சட்ட சபைகளுக்கு அடிபடுகிறதே தவிர "வசிஷ்டர்களின்" வாக்குநிறைவேறுவதாக காணவில்லை. ஆதலால் சுயராஜ்யக் கட்சி பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்பட்டது யென்பதற்கு இனியும் எதாவது ஆதாரம் வேண்டுமா?

## இந்து மத தேவஸ்தான போர்டு.

தேவஸ்தான போர்டு கமிஷனர் ஸ்ரீமான் P. V. நடராஜ முதலியார், ஆனரரி அஸிஸ்டெண்ட் கமிஷனர் ஸ்ரீமான் சக்கரபாணி செட்டியார், இனிஸ்பெக்டர் ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை ஆகிய கனவான்கள் கோயமுத்தூரிலிருந்து சென்னிமலைக்கு ஈங்கூர் ஸ்டேஷன் வழியாக 1-7-26-உ பகல் 11-மணிக்கு வந்து சேர்ந்தார்கள். ஈரோடு தாலூகா தேவஸ்தான கமிட்டி பிரசிடெண்ட் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரும் கமிட்டி மெம்பர் ஸ்ரீமான்கள் பூந்துறை துரைசாமி கவுண்டர், பாரூர் ஆறுமுக கவுண்டர், புளியம்பட்டி ரங்கப்ப கவுண்டர், ஈங்கூர் இராமசாமி கவுண்டர், ஈரோடு அ. சுந்திர முதலியார் ஆகிய கனவான்களால் வரவேற்று ஈங்கூர் கமிட்டி மெம்பர் ஸ்ரீமான் இராமசாமி கவுண்டர் அவர்களால் ஒரு பெரிய விருந்து நடத்தப்பட்டது. அவ்விருந்துக்கு ஸ்ரீமான்கள் பொன்னாச்சி இரத்தினசபாபதி கவுண்டர், சி. கே. சுப்பிரமணிய முதலியார் மற்றும் பல பிரபல கனவான்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். விருந்து நடந்த பின் ஈங்கூரிலிருந்து மோட்டார் வழியாய் எல்லோருமாக சென்னிமலைக்குப்போனதும் அங்குள்ள பிரமுகர்களால் வரவேற்று வாத்தியங்களுடன் ஊர்வலமாக சென்னிமலை போர்டு பள்ளிக்கூட கட்டடத்திற்கு அழைத்துச்சென்று சென்னிமலை தர்மபரிபாலன சபையாரால் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தில் தர்மபரிபாலன சபை பிரசிடெண்ட் ஸ்ரீமான் கிருஷ்ண முதலியாரைக்கொண்டு ஸ்ரீமான் நடராஜ முதலியார் அவர்களுக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்து கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் முதலியார் பதிலளித்ததும் ஸ்ரீமான்கள் சி. கே. சுப்பிரமணிய முதலியார், சக்கரபாணி செட்டியார் ஆகியவர்கள் தர்ம பரிபாலனத்தைப் பற்றியும் தேவஸ்தான போர்டு ஏற்பட்டதால் நமது மாகாணத்திற்கு ஏற்பட்டு வரும் நன்மையைப்பற்றியும் தெளிவாய்ப் பேசினார்கள். கடைசியில், அக்கிராசனர் ஸ்ரீமான் நாயக்கர் முடிவுரையாக தற்காலம் நமது நாட்டில் தர்மம் என்பதும் பரிபாலனம் என்பதும் மக்களின் பொது வாழ்க்கைக்கோ பாமார்த்தத்திற்கோ கொஞ்சமும் உபயோகப்படாமல் ஏதோ ஒரு வகுப்பார் பிழைப்பதற்காகவே ஏற்படுத்தப் பட்டதாகக் காண்கிறதே அல்லாமல் அதில் ஒருவித தத்துவமும் இல்லை என்றும், இந்துமதம் என்று சொல்லப்படுவதே ஒரு பொருளற்ற தாய்ப் போய்விட்டதென்றும், நமது மக்கள் மதத்தின் பெயராலும் தர்மத்தின் பெயராலும் பரிபாலனத்தின் பெயராலும் செலவிடும் கோடிக்கணக்கான ரூபாய்கள் வீணாய் போகின்றதென்றும், சர்க்காருக்குக் கொடுக்கும் வரியைவிட மோசமான வைதீகச்சடங்குகளுக்கு செலவழிக்கின்றோம் என்றும், தண்டவரி கொடுப்பதைவிட கொடுமையாய் கோயில்களுக்கும் குருக்களுக்கும் ஆச்சாரியர்களுக்கும் செலவழிக்கிறோமென்றும், இவ்வளவும் ஒருவகுப்பார் வயிறு புடைக்கத்தின்பதற்கும் நம்மை அவர்கள் காலில் விழுந்து முட்டாள்தனமாய் கும்பிடச்செய்வதற்கும் உபயோகப்படுகிறதே அல்லாமல் வேறில்லை என்றும், இவ்வித அஞ்ஞானம் நீங்குவதற்கு இந்த இந்துமத தேவஸ்தான பரிபாலனச் சட்டம் உபயோகப்படும் என்று தான் நம்புவதாகவும் அதன் பொருட்டே தான் அதை ஆதரிப்பதாகவும் இப்போது அதை - எதிர்ப்பவர்களும் தாங்கள் இத்தனைகாலம் மக்களை ஏமாற்றி ஏகபோகமாய் அனுபவித்துக்கொண்டிருந்த சௌகரியங்கள் போய்விடுமே என்பதாக சுயநலப்பற்றுக்கொண்டே எதிர்க்கிறார்கள் என்றும், அனாவசியமாய் வைதீகச் சடங்குகளுக்கு செலவு செய்யக்கூடாது என்றும், அதுவும் பிராமணர் என்று சொல்லும் ஒரு ஜாதியாருக்குக் கொடுப்பதும் பொங்கிப்போடுவதும் அவர்களுக்குக் கொடுத்தால் நமது பாவம் தொலைந்து மோக்ஷத்திற்கு போகலாம், நமது பெரியோர்களை மோக்ஷத்திற்கனுப்பலாம் என்கிற எண்ணமும் நம்மை விட்டு ஒழிய வேண்டுமென்றும் பேசினார். பிறகு எல்லோருக்கும் தாம்பூலம் சந்தனம் சிற்றுண்டி முதலியன வழங்கப்பட்டு கூட்டம்முடிவுபெற்றது. அக்கூட்டத்திற்கு சென்னிமலை ஸ்ரீமான்கள் குருமூர்த்தி செட்டியார், முருகேச முதலியார், யூனியன் சேர்மென் இராமசாமி முதலியார், சேதுமாதவ பிள்ளை மற்றும் சுற்றுப்பக்கத்து கிராம வாசிகள் முதலிய சுமார் 500 ஜனங்களுக்கு மேலாக வந்திருந்தார்கள். அன்று இரவு சென்னிமலை தேவஸ்தானத்துக்கு ஸ்கிம் ஏற்பாடு செய்வதைப்பற்றி பேசிவிட்டு மறுநாள்காலை கமிஷனர் அவர்களும் மற்றும் போர்டைச் சேர்ந்தவர்களும் கோபிசெட்டிபாளையம் போய் அங்கு மேற்பார்வை பார்த்துவிட்டு மறுநாள் காலை சேலம் போய்விட்டார்கள்

ஒரு நிருபர்.

# திரு. வி. க. முதலியார் விலகினர்.

"பிராமணரல்லாத காங்கிரஸ்காரர் நிலை இருதலைக் கொள்ளி எறும்பு போலிருக்கிறது."

"அரசியல் கிளர்ச்சியும் அரசியல் கட்சியுந்தான் தேசத் தொண்டு என்று எனக்குத் தோன்றவில்லை."

## "ஒரு கட்சியிலும் சேராது சோம்புற்று வாளாக் கிடக்கவும் மாட்டேன்.

ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து விலகுவதைப் பற்றிய விளக்கவுரை.

ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து விலகிக்கொண்டு அவர் திரு. சீனிவாசய்யங்காருக்கு அனுப்பியுள்ள இராஜிநாமாக் கடிதத்தையும், அக்கடிதத்தின் மீது விளக்கமாக 'நவசக்தி' பத்திரிகையில் தான் எழுதியுள்ள தலையங்கத்தையும் கீழே பிரசுரித்துள்ளோம். இதை நம் வாசகர்கள் ஆழ்ந்து நோக்குவாராக:—

தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு. எஸ். சீனிவாசய்யங்காருக்கு,

அன்பார்ந்த ஐய,

வணக்கம். ஒத்துழையாமையே நாட்டுக்கு உரிமை நல்கவல்லது என்பது எனது அடிப்படையான கொள்கை. ஒத்துழையாமைக்கெனக் காந்தியடிகள் கோலிய திட்டம் இப்பொழுது காங்கிரஸ் நிகழ்ச்சி முறையில் இல்லா தொழியினும் அதன்கண் ஒத்துழையாக் குறிப்பு வேறு பொருளிலுண்மை கண்டு, அதையாதல் நாடு நெகிழவிடாது காத்தல் சாலுமென்றும், ஒத்துழையாமை என்பது அறவே பட்டொழியாதவாறு, அதை புணர்வளவிலாதல் ஒருபுடை யோம்பிவரின் பின்னை அஃது ஆக்கம்பெறு தற்குரிய துறை தோன்றும் என்றும் ஒரு பெருநோக்கங்கொண்டு கான்பூர் காங்கிரஸ் தீர்மான வழி நின்று தொண்டாற்றத் தலைப்பட்டேன். இப்பொழுது காங்கிரஸ் அபேட்சகர்களிற் சிலர் ஒத்துழையா உணர்வே நாட்டில் வேரூன்றாதவாறு கல்லிவருவது கண்கூடு. அவர்கள் நோக்கோடு எனது நோக்கு எங்ஙனே அரண்செய்யும்? காங்கிரஸ் கூட்டத்தி லிருந்துகொண்டு அவர்களுடன் பிணக்குற்றுப் போரிடுதலுஞ் சாலுடைத்தன்று. நாட்டிலோ சாதி சமயப் பூசல் வகுப்புரிமை புணர்வு முதலியன காட்டுத் தீப்போல் பரவி வருகின்றன. இக்கொடுமைகளைத் தொலைக்க உழைக்கவேண்டுமென்னும் அவா என்னைப் பிடர் பிடித்துந்தாத நாளில்லை. இதற்கு அரசியல் கிளர்ச்சியும், அரசியல் கட்சியும், தேர்தல் பிரசாரமும் பெருமுட்டாக நிற்பதும் எனக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகிறது. நாட்டிற் கனன்றெரியும் வகுப்புப் பிணக்கைத் தணிக்க வல்லது சன்மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள காந்தியமெனுந் தண்புனல் என்று எனது மனச்சான்றெனுங் கடவுள் நன்கு அறிவுறுத்துகிறது. அம் மனச்சான்று வழிநின்று தொண்டாற்ற வேண்டுமேல் காங்கிரஸ் காரியக் கூட்டத்தில் அங்கம் பெற்றிருத்தல் அறமாகாது. ஆதலின் அதனின்றும் விலக வேண்டுமென உறுதிகொண்டேன். தயைகூர்ந்து எனது விலகுதலை அன்புடன் ஏற்குமாறு வேண்டுகிறேன். இது முடிந்த மொழியன்றி மீண்டு முன்னு மொழியன்று என்பதையுந் தங்கட்கு வணக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராயப்பேட்டை, 9-7-26.

தங்கள் அன்பார்ந்த,
திரு. வி. கலியாணசுந்தரன்.

### எனக்கினிய தொண்டு.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் காரியக் கூட்டத்தினின்றும் விலகுவான் வேண்டித் தலைவருக்கு விடுத்த கடிதம் பலருக்குப் பலதிற ஐயப்பாடுகளை விளைக்குமென்று எவரும் ஊகிக்கக்கூடும். ஐயப்பாட்டிற்குக் காரணம் காலநிலையைப் பொறுத்து நிற்கிறது. இக் காலத்தைப்போன்ற கொடுங் காலத்தை நமது நாடு கண்டிருக்குமோ என்று நானும் ஐயுறுகிறேன். அரசியல் கட்சிப் பிணக்குகளும், தேர்தல் பிரசாரத்தில் கபவர்கள் புனைந்துரைக்கும் பொய்புரட்டுகளும், கட்சிப் பற்றால் உண்மைகளைத் திரித்துக் கூறும் பத்திரிகைகளும் மலிந்து மலிந்து திரண்டு திரண்டு குவியும் இந்நாளில் ஒருவரை ஒருவர் ஐயுறல் இயல்பாகிவிட்டது. நமது நாட்டிடை ஆன்மநேயம் நம்பிக்கை முதலியன மீண்டும் உயிர்பெற்றெழுந்தாலன்றி நாட்டுக்கு உய்வில்லை என்பது திண்ணம்.

அரசியல் தொண்டில் தலைப்பட்டுள்ளார் நிலை மிகவும் இரங்கத்தக்கதாயிருக்கிறது. ஒருவர் உள்ளக் கிடக்கையை மற்றொருவர் உணராது தமது உள்ளங் கண்ணுக்குத் தோன்றுமாறு அவருள்ளத்தைக் கொண்டு பொய்களைப் புனைந்துரைக்கிறார். அப்பொய்கள் நாட்டையே பாழ்படுத்துகின்றன.

இப்போது நமது தமிழ் நாட்டில் "ஜஸ்டிஸ் கட்சி, பார்ப்பனக் கட்சி" என்னுஞ் சொற்றொடர்கள் உலவாத இடமில்லை. இவைகளால் உண்மைக் காங்கிரஸ்காரருக்கு விளைந்துள்ள இடுக்கண் இயம்பற்பாலதன்று. அதிலும் பிராமணரல்லாத காங்கிரஸ்காரருக்கே இடுக்கண் நெடுந்துப் பெரிதுமுண்டு. பிராமணரல்லாத காங்கிரஸ்காரர் ஒருவேளை "பார்ப்பனக் கட்சி"க் காரராகவும், மற்றொருவேளை "ஜஸ்டிஸ் கட்சி"க் காரராகவும் கருதப்படுகிறார். அவர் காங்கிரஸ் சார்பாகத் தொண்டாற்றும் வேளையில் அவர் "பார்ப்பனக் கட்சியார்" என்று ஜஸ்டிஸ் கட்சியாரால் தூற்றப்படுகிறார்; அவரே காங்கிரஸிலுள்ள குறைபாடுகளை எடுத்துமுறையிடும் வேளையில் பிராமணர்களால் அவர் "ஜஸ்டிஸ் கட்சிக்காரர்" என்று தூற்றப்படுகிறார். அந்தோ! பிராமணரல்லாத காங்கிரஸ்காரர் நிலை இருதலைக் கொள்ளி எறும்பு போலிருக்கிறது! என் செய்வது!


எனது நிலை எனக்குத் தெரியும்; எல்லாம் வல்ல இறைவனுக்குத் தெரியும். நான் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்தவனுமல்லன்; பார்ப்பனக் கட்சியைச் சார்ந்தவனுமல்லன், சாதிக்கட்சியில் எனக்குச் சிறிதும் பற்றில்லை. தேசக் கட்சியே எனது கட்சி: அது குறித்துப் போராடும் காங்கிரஸ் கட்சியே எனது கட்சி. உண்மையறியாது எனது நிலையைப் பிறழக்கொண்டு உளறுவோர் உரைகள் என்னை என் செய்யும்?

முன்னே சுயாராஜ்யக் கட்சி காங்கிரஸோடு ஒன்றாது தனித்து நின்ற ஞான்று, அதை யான் தாக்கியபோது சிலர் என்னை ஜஸ்டிஸ் கட்சிக்காரன் என்று பறை சாற்றினர். பின்னே சுயாராஜ்யக் கட்சி தனித்து நில்லாது கான்பூரில் காங்கிரஸோடு ஒன்றிய நாள் தொட்டு அதைத் தாக்கா தொழிந்தது கண்ட சிலர் என்னைப் "பார்ப்பனக் கட்சியான்" என்று மனங்கூசாது மொழிந்து வந்தனர். இப்பொழுது சில காரணம் பற்றிக் காங்கிரஸ் காரியக் கூட்டத்தினின்றும் விலக உன்னியது காணுஞ் சிலர் என்னை ஜஸ்டிஸ் கட்சிக்காரன் என்று சொல்ல முந்துவர். சில இடங்களில் யான் ஜஸ்டிஸ் கட்சியில் சேரப்போவதாகச் சில வம்பர்கள் புகன்று வருவதாகவுங் கேள்வியுறுகிறேன், அது முற்றிலும் பொய்.

வகுப்புரிமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சியில் யான் எவ்வாறு சேர்வேன்? காங்கரஸ் சார்பாக நடைபெற்று வரும் தேர்தல் பிரசாரத்திலும் நான் கலந்து கொள்ளேன். காரணம் யான் தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்க்கு விடுத்துள்ள கடிதத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கட்சியிலுஞ் சேராது சோம்புற்று வாளாக் கிடக்கவும் மாட்டேன். அக்கினி மந்தம் ஒருபாலும் மண்ணீரல் சவலை மற்றொருபாலும் முட்டிப் பிடித்துக்கொண்டுள்ள வேளைகளிலும் ஊர் ஊராகச் சென்று சொற்பெருக்கு நிகழ்த்திய அடியேன் ஒருபோதும் வாளாயிரேன். உடல் உரங் குன்றிப் படுக்கையிலிருக்க நேரினும் உள்ளத்தாலாதல் தேசத் தொண்டு செய்வேன். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது எனது குருமொழி.

எனக்கினிய தேசத்தொண்டு எது என்பதை அவ்வப்போது காலதேவதை எனக்கு அறிவுறுத்திக்கொண்டே செல்லும். அரசியல் கிளர்ச்சியும் அரசியல் கட்சியுந்தான் தேசத்தொண்டு என்று எனக்குத் தோன்றவில்லை. வேறு துறை பற்றியும் தேசத் தொண்டு செய்யலாமென்பது எனது உள்ளக்கிடக்கை. எல்லாத் தொண்டுகளையும் அடக்கிக்கொண்டுள்ள அருநெறி என்னுஞ்

(இதன் தொடர்ச்சியை 10-ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-ஷு ஆனி-மீ 27-உ

# எதிர்பார்த்த வண்ணமே!

—:o:—

**நாம்** எதிர்பார்த்த வண்ணமே திருவாளர் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்களும் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்த தன் தொடர்பை விலக்கிக் கொண்டார். "இது முடிந்த மொழியன்றி மீண்டு முன்னு மொழியன்று" என்னும் சொற்களால் இனி மீண்டும் புனராலோசனை செய்வதில்லை எனவும் கூறி விட்டார். இவரது ராஜிநாமாவைப் பிறிதொரு பக்கம் பிரசுரித்துள்ளோம். டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரவர்களும் திரு. முதலியாரவர்கட்கு முன்னரே விலகிவிட்டார். அவரும் இனிப் புனராலோசனை செய்ய முடியாது என்பதாக தமிழ்நாடு காங்கரஸ் நிர்வாகக் கூட்டமும் பொதுக் கூட்டமும் நிகழ்ந்த 29-ந் தேதியில் தலைவருக்குக் கிடைக்கும்படியும் அதைக் கூட்டத்தில் படித்துக்காட்டுமாறு கடிதம் அனுப்பியிருந்தும், நமது பார்ப்பனத் "தலைவர்" அதைப் படித்துக்காட்டாமலும் விஷயத்தையே வெளியிடாமலும் மூடி வைத்து விட்டு புனராலோசனை செய்யுமாறு கேட்டுக் கொள்வதாக திருட்டுத் தீர்மானம் செய்து ஏமாற்றினர்.

திரு. முதலியார், திரு. நாயுடுகார் ஆகிய இருவரும் காங்கிரஸ் காரியக் கமிட்டியினின்று விலகியே விட்டார்கள். இதன் தத்துவம் என்ன? இதுபோழ்து இவர்களுக்கு தேசபக்தி இல்லாது போயிற்று? சுயநலம் முளைத்துவிட்டதா? அல்லது சர்க்கார் தயவை நாடியா? அன்றி ஜஸ்டிஸ் கட்சியில் சேரவா? இவை ஒன்றற்கும் அல்லவே அல்ல. மற்று எதன் பொருட்டு விலகிக் கொண்டார்கள்? காங்கரஸ் மகா சபையில் பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சியை அறிந்து, தாங்கள் தற்கால காங்கிரசில் அங்கம் வகித்திருப்பதால் நாட்டிற்கு எவ்வித நன்மையும் செய்ய இயலாதென்பதை உணர்ந்து, தங்களையே கருவியாகப் பிரயோகித்து நமது சமுகத்திற்குப் (பார்ப்பனரல்லாதார் சமுகத்திற்கு) பார்ப்பனர்கள் ஆபத்து விளைவிக்கிறார்கள் என்பதைக் கண்ணாரக் கண்டுகொண்டதாலுமேயல்லாது வேறல்ல. ஆனது பற்றியே தைரியமாய் விலகி விட்டார்கள். நமது பார்ப்பனர் இனி இவர்கள் மீது வசை புராணம் பாடி இவர்களுக்குப் புன்மொழி மகுடஞ் சூட்ட பார்ப்பனரல்லாதாரிலேயே சில பாவலர் நாவலர் முதலியோரைத் தலைவராக்குவார்கள். நிற்க,

காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இனியும் நான்கு பார்ப்பனரல்லாத கனவான்கள் அங்கம் வகித்து வருகிறார்கள். அவர்கள் திருவாளர்களான ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார், மருதவனம் பிள்ளை, ஹமீத்கான் ஆகியோரே யாகும்.

இந்நால்வருள் திரு. நாயக்கரைப் பற்றி கவலையுறவேண்டியதே யில்லை. கூடிய விரைவில் பார்ப்பனர்களே அவரை விலக்கிவிடப் போகிறார்கள். திரு. நாயக்கர் காங்கிரசில் அங்கம் வகித்திருப்பது பார்ப்பனர்களுக்கு பேரிடராய் இருப்பதாகக் கருதுகிறார்களே யன்றி அவர் இருக்கவேண்டுமென்கிற ஆசை பார்ப்பனர்களுக்கு ஒரு சிறிதும் இல்லை.

திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியாரைப் பற்றி சிறிது கவனிக்க வேண்டியதிருக்கிறது. "இப் பொல்லாப் பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதார் சமுகத்தையும் அவர்களது இயக்கத்தையும் ஆதிக்கத்தையும் அழிப்பதற்காகவே திரு. ஷண்முகம் செட்டியாரை உபயோகித்து வருகிறார்கள். திரு. செட்டியாரும் தனக்கு இந்திய சட்ட சபையில் ஸ்தானம் பெறவேண்டி தமது சமுகத்தைப் பார்ப்பனருக்கு விற்று பார்ப்பனர் பின் திரிகிறார்" என்று உலகினர் சொல்வதற்கு முன்பே விலகிக்கொள்ளுவார் என்று நம்புகிறோம். ஆனால் திரு. முதலியாரும் டாக்டர் நாயுடுகாரும் விலகிக்கொண்டதால் இனி நமது பார்ப்பன வர்க்கத்திற்கு திரு. ஷண்முகம் செட்டியார் "லோக குருவாக" விளங்கப் போகிறார். அவருக்கு இனி சின்னாட்கள் வரை "ஸ்ரீஜத்" "ஸ்ரீலஸ்ரீ" "பிரம்மஸ்ரீ" முதலிய பட்டங்கள் வழங்கப் பெறும்; அநேக பார்ப்பனக் குழந்தைகட்கு செட்டியாரது திருப்பெயர் சூட்டப்பெறும்; பார்ப்பனர் போகும் கூட்டங்களிலும் நிறுவும் கூட்டங்களிலும் செட்டியாரவர்கள் பெயர் பெரிய பெரிய எழுத்துக்களில் பொறிக்கப் பெறும்; பிரசங்க மேடைகளிலெல்லாம் செட்டியாரது பெயரின் நாதம் தொனிக்கப் பெறும். பார்ப்பனப் பத்திரிகைகளெல்லாம் செட்டியார் மயமாகவே இருக்கும். இனி ஆறுமாத காலத்திற்கு—அவ்வளவேது?—நான்கு மாத காலத்திற்கு, தெளிவாகக் கூறுமிடத்து சட்டசபைத் தேர்தல் முடிவுறும் வரை நமது செட்டியாருக்கு எங்கும் வரவேற்பும் வண்டியிழுப்பும் பூமாலைகளும் மாப்பிள்ளைக் கோலமும் பறபறக்கும். நமது செட்டியார் கட்புலனுக்கு, நம்மை நோக்குங்கால் கண்ணாடி போன்றும் பார்ப்பனரை நோக்குங்கால் மாதவி போன்றும் புலனாகும். சுலபத்தில் "மாதவியை" விட்டு விலக மனங்கொள்ளார். இனி அவரது யோகமே யோகம்!

போனது போகட்டும். திரு. முதலியாரும், டாக்டர் நாயுடுகாரும் விலகினதினாலாவது நமது செட்டியாருக்கு இத்தகைய ராஜானு ராஜ போகம் வருகிறதே; நாம் ஆசை தீரப்பார்த்து ஆனந்தம் அனுபவிக்கலாம்! எவ்வாறிருப்பினும் இறுதியில் முதலியார் நாயுடு போன்றே செட்டியாரும் பார்ப்பனரை விட்டு விலகியே தீருவார். ஏனெனில் திருவாளர்கள் முதலியார், நாயுடு, நாயக்கர், சக்கரை, ஆரியா, தண்டபாணி, இராமநாதன் ஆகியோர்கட்கு பார்ப்பனர்கள் அளந்த வள்ளம் அட்டத்தில் வைத்திருக்கிறார்களேயன்றி உடைத்தெறிந்து விட்டாரில்லை. ஆகவே அவரது மருள் மயக்கம் தெளியும் வரை காத்திருக்க வேண்டியதே.

திரு மருதவனம் பிள்ளை அவர்களும் மிகவும் நல்லவர். ஆனால் அவர் சுலபத்தில் விலகுவார் என்று எதிர்பார்ப்பதே முட்டாள் தனமாகும். ஏனெனில் அவர் தானும் ஞானஸ்நானம் பெற்று பார்ப்பனராக மாற்றமடைந்து விட்டதாக உள்ளூற நினைத்துக் கொண்டிருக்கிறார். 1923-ம் ஆண்டு நடந்த தேர்தலின் போழ்து திரு. மருதவனம் பிள்ளையவர்களின் பொருட் செலவாலும் பிரசாரத்தாலும் திரு. எ. ரெங்கசாமி ஐயங்கார் பத்துஜி ஐயர் ஆகிய இரு பார்ப்பனர்கள் சட்டசபையில் அங்கம் பெற்றிருப்பினும் திரு. பிள்ளைக்கு சுமார் 50,000 ரூபாய் வரை செலவழித்திருப்பினும், தான் சட்டசபை அங்கம் பெற்றது பார்ப்பனர்தம் கருணையாலும் தயவின் பெருக்காலும் என்றே திரு. பிள்ளை நினைத்துக்கொண்டிருக்கிறார். இனி அடுத்த தேர்தலில் தான் சட்டசபை அங்கம அடைதலும் அக்கூட்டத்தார் தயவிருந்தால்தான் ஆகும் என்பதாகவே திரு. பிள்ளை நினைக்கிறார். இம்மட்டோ, பார்ப்பனர் விரோதம் நேர்ந்து விடின் பெருஞ்சாபமாய் முடியுமென்றும் வாழவே ஏலாதென்றும் முடிவான கருத்துடையவர் நமது பிள்ளையவர்கள்.

மேலும் திரு எஸ். சீனிவாசய்யங்காரின் தயவால் வடபாதிமங்கலம் எஸ்டேட்டுக்கு திரு. பிள்ளை ரிசிவராகயிருக்கிறார் என்று சொல்லிக் கொள்ளப்படுபவர். திரு. எ. ரெங்கசாமி ஐயங்கார் தயவால் "சுதேசமித்திரன்" பத்திரிகையில் நாள்தோறும் திகழ்பவர். இன்னும் வேறு பல வழிகளிலும் பார்ப்பனர்களுடன் இரண்டறக் கலந்து கொண்டிருக்கிறார். ஆகவே பிள்ளைவாள் பார்ப்பனரை விட்டு விலகுவார் என்று எளிதில் எதிர்பார்க்க வல்லதாகா. திருவாளர்கள் முதலியார், நாயுடுகார், நாயக்கர், சக்கரை, ஆரியா முதலிய இவர்கள் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளையும் கபடவேஷ நாடகத்தையும் அறிய இத்துணை காலமும் இத்துணை மாதங்களும் வேண்டியிருந்ததெனில், அந்தோ! பாவம்! சின்னாட்களுக்கு முன்பாக உலகவாழ்க்கையிலிறங்கிய நமது திரு. பிள்ளையவர்களுக்கு எத்துணை காலம் கடக்க வேண்டும்? எனவே நாம் இதை எளிதில் எதிர்பார்த்தல் எங்ஙனம் சாலும்.

ஜனாப் ஹமீத்கான் சாஹிப் விஷயமோ...... அது பிறந்தகத்திலிருந்தாலும் ஒன்று தான் புக்ககத்திலிருந்தாலும் ஒன்றுதான். எங்கிருந்தாலும் அப்பாத்திரம் தண்ணீர் மொள்ளுவதற்குப் பயன்படாது. அல்லது அப்பாத்திரம் விலகி வந்து விட்டாலும் அதைப் போன்ற பாத்திரம் நமது பார்ப்பனர்களுக்கு

ஆயிரக்கணக்காக ஆகப்படும். ஆகவே அதைப்பற்றி எவரும் கவலை கொள்ளார்.

எனவே இனி பார்ப்பனரல்லாதார் மேற்கொள்ள வேண்டிய கடமை யாது? தாங்கள் ராஜிநாமா செய்து விட்டதாலேயே இனி திரு. முதலியாரும், டாக்டர் நாயுடுகாரும் வாளாவிருக்கப்போவதில்லை என்றும் எழுதியிருக்கிறார்கள். தங்களுடைய மனதிற்குச் சரியென்று தோன்றும் வண்ணம் வெளியில் பிரசாரம் செய்தற்கு அவர்கள் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கம் வகித்திருப்பது ஒவ்வாதகாரியமென்கிற உணர்ச்சியினாலேயே விலகிக் கொண்டதாக தெரிவித்துள்ளார்கள். இதனின்று அவர்கள் தீவிர பிரசாரத்தில் இறங்கப்போகிறார்கள் என்று தெளிவாகிறது. அத்தீவிர பிரசாரம் யாதென நோக்குழி 9-7-26-ல் வெளிப்போந்த தமது "நவசக்தி" பாலின் சிலம்பொலித் தலைப்பில் "இந்தியாவின் தலையெழுத்து" என்னும் பொருள் பற்றிய கட்டுரையில் திரு. முதலியார் தமது உள்ளக்கிடக்கையை உணர்த்துகிறார். அஃதாவது,

"இயற்கைக்கு மாறுபட்ட பல கொடுமைகளை மக்கள் வாழ்வில் புகுத்தினமையால் மக்கள் அன்புக் கட்டுக் குலையலாயிற்று,—பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்ததும்,—மக்கள் உடல் தாங்கியுள்ள சிலரைத் தீண்டாதாரென ஒதுக்கியதும்,—பெண் மக்களைக் கல்வி பெறாத வழியில் அடக்கி வைத்திருப்பதும்,—கோயில்களிலும் மக்கட்கு உரிமை படிப்படியாக அருகிவழங்கியிருப்பதும்,—இவைகள் குற்றமுடையன என்று சொற்ற அறவோர்களைக் கொன்றதும்,—ஆகிய கருமங்கள் திரண்டு உருண்டு நாட்டை வருத்துகின்றன,—இதுவே இந்தியாவின் தலையெழுத்து,—இத் தலையெழுத்தைத் துடைக்க வேண்டுமானால் நாட்டார் என் செயல் வேண்டும்? முதலாவது நாட்டார் தம் பாலுள்ள குறைகளைக் களைய வேண்டும், நாட்டில் பல திறக் குறைகளை வைத்துக்கொண்டு வெறும் அரசியல் கிளர்ச்சி செய்வதனால் நாட்டிற்கு இடுக்கண் பல நேருகின்றன,—இப்போதைய அரசியல் கிளர்ச்சியில் மனிதனை விலங்காக்கும் பேச்சும் செயலும் மலிந்து காணக் கிடக்கின்றன,—தற்காலக் கல்வியுடையார் என்று சொல்லப்படுவோர் சாதி வேற்றுமைகளையும் கிளப்பி விடுவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்,—இந்நிலையில் அரசியல் கிளர்ச்சி வழி நண்ணியும், அரசியல் கட்சி வழி நின்றும் உழைப்பதால் நாட்டுக்கு உண்மை நலன் விளையுமென்று சொல்வதற் கிடமில்லை,— நம் நாட்டில் பிராமணர் பிராமணரல்லாதார் பகைமை நிலை நண்ணியிருக்கிறது என்பதை மறுப்பதும் மறைப்பதும் அறியாமையாகும். ஆகவே இப்பொழுது நம் நாட்டுக்குரிய பணியாது? வெறும் அரசியல் கிளர்ச்சி பணியன்று. நாட்டில் நீண்டகாலமாக நிலவிவரும் குறைபாடுகளைப் போக்கவும் தற்போதுள்ள சில புதிய குறைபாடுகளைத் தொலைக்கவும் வல்ல ஒரு பணியில் அறிஞர்கள் தலைப்படல் வேண்டும். உரிமையில்லா நாட்டில் அரசியல் கட்சிகள் வளர்வதும், அவைகளின் வழி உழல்வதும், நாட்டைக் குழியில் வீழ்த்துவதாக முடியும்",

என்று உரைக்கிறார். இவ்வுரைகளை நாம் பொன்னே போல் போற்றுகிறோம். நமது "குடி அரசு"வின் கொள்கைகளையும், அது ஆரம்ப காலந்தொட்டு இற்றை வரைத் தாங்கி வந்த யாவையும் பொறுக்கித் தரித்துப் புடைத்துப்பார்த்தால் திரு. முதலியார் மேற்கூறியுள்ள கருத்துக்கள் புலனாகுமேயன்றி பிறிதொன்றும் புலனாகா.

உண்மையில் நமது முதலியார் இக்கொள்கைகளோடு செய்யும் எவ்விதப்பணிக்கும் நாம் தொண்டனாயிருக்க உறுதி கூறுகிறோம். டாக்டர் நாயுடுகாருக்கு இக்கொள்கைகளின் முறையில் இரண்டோரிடத்தில் மாறுபாடாய்த் தோன்றினும் இவற்றுள்ளிருக்கும் சத்துநிரம்பிய தத்துவத்தில் எத்தகைய மாற்றமும் இருக்காதென்றே சொல்லுவோம். தமிழ்நாட்டு மக்களில் பார்ப்பனரல்லாதாரில் 1000-க்கு 999 மக்கள் இக்கொள்கை உடையவர்களாகவே யிருக்கின்றனர். ஜஸ்டிஸ் கட்சியாரது கொள்கையும் இதுவென்றே சொல்கிறார்கள். இவ்வாறாக, நம்முடைய அபிப்பிராய பேதமென்பது மாய்கை கெழுமிய மனக்கசப்பே அல்லாமல் வேறல்ல. ஆகலான் விரைவில் பார்ப்பனரல்லாதார் அனைவரும் ஒன்றுபட்டு ஓர் மகாநாடு கூட்டி தங்களுக்குள்ளிருக்கும் மனக்கசப்பையும் மாய்கையையும் அகற்றி ஒன்று கூடி மேற்கண்ட கொள்கையுடையதான ஆக்கல் திட்டத்தை கோலி அஃதினை நிறைவேற்ற உழைப்பது அறிவுடைய மக்களின் செயலாகும். ஆகவே இற்றைவரை நம் முறை பிடிட்டு வந்த வண்ணம் விரைவில் தமிழ் மக்கள் ஒருங்கு சேர்ந்து ஓர் முடிக்கான விழைகின்றோம்.

---

## கோயமுத்தூரில் ஜில்லாபிரமுகர்கள் மகாநாடு.

கோவையில் ஸ்ரீமான் சுப்பிரமணிய செட்டியார் பங்களாவில் 7-ந்தேதி பகல் 2-மணிக்கு முன்தெரிவித்தபடி ஜில்லா பிரமுகர்கள் மகாநாடு கூடிற்று. ஜில்லாவின் பலபாகங்களிலிருந்தும் பட்டக்கார கனவான்கள், ஜமீன்தார்கள், தாலூகாபோர்டு பிரசிடெண்டுகள், தாலூகா ஜில்லா போர்டுகளின் மெம்பர்கள், பிரபல மிராஸ்தார்கள், வியாபாரிகள் முதலியபலரும் விஜயம் செய்திருந்தார்கள். பார்ப்பனர்கள் பலருக்கு அழைப்புக்கடிதம் அனுப்பியிருந்தும் கட்டுப்பாடாய் யாரும் வரவில்லை. சுமார் 2½ மணி நேரம் அபேக்ஷகர்களிடம் தனித்தனியாகவும் சேர்ந்தும் பேசியும் அதுசமயம் ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் போய்விட்டது. அடுத்த கூட்டம் 19-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. 19-தேதி கூட்டத்திலும் போட்டியன்னியில் சட்டசபைத் தேர்தலோ ஜில்லா போர்டு பிரசிடெண்டு தேர்தலோ நடக்கும்படி செய்யக்கூடும் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் ஒவ்வொரு அபேக்ஷகர்களும் பிடிவாதக்காரர்களாகவும் பதினாயிரக்கணக்காய் செலவு செய்ய சக்தி உள்ளவர்களாயும் பணம் செலவு செய்து தேர்தலில் ஜெயித்து விடலாம் என்கிற உறுதி உள்ளவர்களாயுமிருப்பதால் பஞ்சாயத்து மதிக்கப்பட மாட்டாதென்றே எண்ணுகிறோம்.

## பார்ப்பனப் பத்திரிகைகள்.

நமது நாட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகளும் பார்ப்பனப் பத்திராதிபர்களும் ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரையும் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களையும் குல குருவாய் மதித்து "ராஜரிஷி" "பிரமரிஷி" என்று புகழ்ந்து வண்டியில் வைத்து இழுத்தது வாசகர்களுக்குத் தெரியும். இப்பேர்ப்பட்ட இருவர்களையும் இன்று என்னமாய் நடத்துகிறார்கள் என்று பார்த்தால் இவ்விரு கனவான்கள் எழுதியனுப்பிய ராஜிநாமாக்களை சரியாய் தங்கள் பத்திரிகையில் போடவே இல்லை. எங்கோ ஒரு மூலையில் ஒன்றரை அங்குலத்தில் பொது ஜனங்கள் ராஜிநாமாவின் முழுக்காரியங்களையும் அறியாதபடி போட்டிருக்கிறது. இவர்கள் ராஜிநாமாவை மதித்ததாகக்கூட காட்டவில்லை. வேறு ஏதாவது உபசார வார்த்தைகூட எழுதவில்லை. ஒரு வயிற்றுச் சோற்று பார்ப்பனன் ஒரு உத்தியோகத்திலும் இல்லாமல் வெறும் ராஜிநாமா அனுப்பியிருந்தால் அதை மகாத்மா காந்தியிடம் கொண்டுபோய் இந்தத் தலைவர் போய்விட்டால் தமிழ் நாடே முழுகிவிடும் என்று சொல்லி மகாத்மாவையே ராஜி செய்யச்சொல்லி ராஜிநாமா கொடுத்ததாலேயே அவனை பெரிய தலைவராக்கிவிடுவார்கள். இதுபோலவே நமது பார்ப்பனர் தங்களது பத்திரிகையின் பலத்தால் பார்ப்பனரல்லாதாருடைய வாழ்வையும் முற்போக்கையும் பாழ்படுத்திவருகிறார்கள். இதிலிருந்தாவது நம் நாட்டு முன்னேற்றத்தையும் பார்ப்பனரல்லாதார் சுய மரியாதையையும் உத்தேசித்தாவது பார்ப்பனப் பத்திரிகைகளை ஒழித்து பார்ப்பனரல்லாத பத்திரிகைகளை ஆதரிக்க முன் வரலாகாதா? ஓ! பார்ப்பனரல்லாத மக்களே! நீங்கள் இன்னமும் உணரவில்லையா. அல்லது அலக்ஷியமா! பயமா! சுயநலமா! எழுங்கள்! பார்ப்பனரல்லாத பத்திரிகைகளை பரப்புங்கள்! அஃதின்றி நாம் சுயமரியாதையோடு மனிதனாக வாழ முடியாது! ஒவ்வொருநாளும் படுக்கையை விட்டெழும்போது பத்திரிகையைப் பரப்ப இன்று என்ன செய்வது என்று யோசியுங்கள்! படுத்துறங்கும்போது இன்று என்ன செய்தோமென்று நினையுங்கள்! உங்களுக்கு ரோஷம் மானம் வெட்கம் இல்லையா என்று உங்கள் மனச்சாக்ஷியைக் கேளுங்கள்! அன்றுதான் நாமும் மனிதனாகலாம்! இல்லாதவரை ஸ்ரீமான் ஒத்தக்கால் கந்தசாமி செட்டியார் பிராமணரல்லாதாருக்கு மூளை இல்லை என்பது பலித்தாலும் பலித்துவிடும்!.

## பெருந்துரை

## குழந்தைகளுக்குப் பால் உதவும் சங்கம்.

பெருந்துரை டாக்டர் ஸ்ரீமான் கோவிந்த நாயர் அவர்கள் பெருமுயற்சியால் பொதுஜனங்களின் பொருளுதவி கொண்டு தினம் ஏழைக் குழந்தைகளுக்கு தர்மமாகப் பால் கொடுக்கும் சங்கம் 8-7-26-ல் ஸ்தாபிக்கப்பட்டது. ஷை சங்கத்தை ஸ்கூல் இன்ஸ்பெக்டர் மிஸ் அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அன்று மாலை பள்ளி மாணவர்கள் சுகாதாரவாரக் கொண்டாட்டம் மிஷின் ஸ்கூலில் ஸ்ரீமான் ஆண்டமுத்து கவுண்டர் அவர்கள் தலைமை வகித்து தமது முடிவுரையாக ஓர் அழகிய பிரசங்கம் செய்தார். இரவு 8 மணிக்கு கூட்டம் கலைந்தது.

## இந்து முஸ்லீம் சந்தேகத்தை ஒழிக்க வழியாம்.

### "பயித்தியம் தெளிந்துபோய்விட்டது உலக்கை எடு கோவணங்கட்ட."

5-7-26-தேதி "மித்திரன்" தன் தலையங்கத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு ஒரு புது வழி கண்டுபிடித்ததாக சாமர்த்தியம் காட்டி விஷச்சிரிப்பு சிரிக்கிறான். அதாவது, சட்டசபைகளிலோ மற்றும் பொது ஸ்தாபனங்களிலோ சமூக சம்பந்தமான பிரச்சினைகள் வரும்போது அந்தந்த சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களில் முக்கால் வாசிப்பேர் ஆக்ஷேபித்தால் அந்த பிரச்சினைகள் கொண்டுவரக் கூடாதாம். இந்த மாதிரி ஒரு தீர்மானம் செய்துவிட்டால் முஸ்லீம்களுக்கு பத்திரம் ஏற்பட்டுபோய்விட்டதாம். இனி முஸ்லீம்கள் சுயராஜ்யக் கட்சியாரோடு இரண்டறக் கலந்துபோகவேண்டியதுதானும்.

இது "பைத்தியம் தெளிந்துபோய்விட்டது, உலக்கை கொண்டுவா கோவணம் கட்டிக்கொள்ள" என்று ஒருவன் தனது பைத்தியம் தெளிந்து போனதற்கு அடையாளமாகப்பேசினது போல் இருக்கிறது. மகமதிய மெம்பர்களில்முக்கால்வாசிப்பேர் ஆக்ஷேபித்தால் இந்து முஸ்லீம் சம்பந்தமான பிரச்னை சபைகளில் வரக்கூடாது என்பதுதான். உதாரணமாக ஒரு முனிசிபாலிட்டியில் ஒரு பள்ளிவாசலை இடித்து ரோட்டுப்போட வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் வருவதாக வைத்துக்கொள்ளுவோம். அந்த முனிசிபாலிட்டியில் 30-மெம்பர்களில் மகமதியர்கள் 8 பேர் இருப்பதாகவே வைத்துக்கொள்ளுவோம். இந்த 8 பேரில் 6 பேர் ஆக்ஷேபித்தால் அந்த தீர்மானம் நிறுத்தப்பட்டுப்போக வேண்டும்.

இந்த விதி நல்ல விதிதான். இது எப்படி இருந்தால் உண்மையான பலனைக்கொடுக்கும்? இந்த எட்டு மெம்பர்களும் மதப்பற்று உள்ளவர்களாகவும் முஸ்லீம் சமூகத்திற்குப் பொறுப்புள்ளவர்களாகவும் இருந்தால்தானே இந்த எட்டுபேரில் ஆறுபேராவது ஆக்ஷேபிப்பார்கள் என்று நம்பலாம். அப்படிக்கின்றி "சைபுல் இஸ்லாம்" எழுதுவது போல் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் பணத்தால், சீனிவாசய்யங்காருக்கு நல்ல பிள்ளைகளாய், சீனிவாசய்யங்கார் ஜாமீன்பேரில் சுயமரியாதை யற்றவர்களாய் அந்த சபைக்குப் போகக்கூடியவர்களாயிருந்தால் முக்கால்வாசிப் பேரல்ல முழுவாசிப் பேரல்ல, கால்வாசிப் பேராவது ஆக்ஷேபிக்கக் கூடியவர்கள் கிடைப்பார்களா?

அதேமாதிரி இந்துக்களுக்குள்ளாகவும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயத்திலும் பார்ப்பனரல்லாதார் தப்பில்லாமல் அய்யங்கார் அவர்கள் பணச்செலவில் ஸ்தானம் பெறுகிறவர்கள் நிறைந்த சட்டசபையில் பார்ப்பனரல்லாதாருக்கு எப்படி பந்தோபஸ்து ஏற்படும்? உதாரணமாக பார்ப்பனரல்லாதார் பணத்திலும் பிரசாரத்திலும் சட்டசபைக்குப்போன ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியார் அந்த விதத்திலாவது பார்ப்பனரல்லாதாருக்குப் பொறுப்பாளியாய் இருக்கிறாரா? நரு தலைவிவாதத்தில் பார்ப்பனர் சொல்லுவதெல்லாம் சரியென்றார். பார்ப்பனர்களுக்காக ஊர் ஊராய் பிரசாரமும் செய்தார். அதற்காகவே இப்போதும் நமது பார்ப்பனர்கள் அவரை ஆதரிக்கிறார்கள். அவரும் பார்ப்பனர் பணத்தையும் பார்ப்பனப் பத்திரிகைகளின் பிரசாரத்தையுமே நம்பி மறுபடியும் சட்டசபைக்கு அபேக்ஷகராய் நிற்கிறார். நமது ஜனங்கள் மறுபடியும் ஏமாந்து செட்டியாரை ஆதரித்துவிடுவார்கள் போலவே தோன்றுகிறது.

ஆதலால் தெரிந்தெடுக்கும் பொறுப்பு அந்தந்த சமூகத்தார்களுக்கென்று வரையறுத்து வைக்கப்படாதவரையில் வேறு எவ்வித விதி செய்தாலும் யோக்கியர்களும் சமூகப்பற்று மதப்பற்று உள்ளவர்களும் பதவி அடைய முடியவே முடியாது. பார்ப்பனர்களின் "கூலிகள்" வந்து சேரத்தான் இடங்கொடுக்கும் என்பது திண்ணம். "மித்திரன்" இந்த சூழ்ச்சித் தந்திரங்களால் முஸ்லீம்களை ஏமாற்ற முடியாது என்பதும் திண்ணம்.

## மதிப்புரை.

### சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்.

தமிழ் மொழிக்கும் தமிழர் ஆராய்ச்சித் துறைக்கும் அரிய நாயகமாய் மிளிரும் மறைத் திருவாளர் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலை அடிகளாரை தமிழுலகம் அறியாது கொல்லோ? நம் அடிகளார் தம் முழ்மொழிப் புலமையின் பெருக்கால் நுண்மையுடன் ஆராய்ந்து தமிழராக தனிச் செங்கோலோச்சும் வண்ணம் இனிய - எளிய - தனித் தமிழ் நடையில் உலகினர்க் கீந்துவரும் உயரிய நூல்களைப் போற்றாத தமிழ் மகன் யாவன்? இப் பெருந்தகையாரால் ஆக்கப்பட்ட "சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்" என்ற அரிய புத்தகம் நமது பார்வைக்குக் கிடைத்தது. இஃது நல்ல கடிதத்தில் 104 பக்கங்களில், பழய வேதத்தில் சாதிப் பிரிவினை கிடையாதென்பதை விளக்கியும், பழய உபநிடதங்களிலும் இதிகாசங்களிலும் சாதி இல்லை என்பதைக் காட்டியும், ஸ்மிருதிகளில் காணப்படும் சாதிப் பிரிவு ஒழுக்கம்பற்றியதே யன்றி பிறப்புரிமை பற்றியதன்று என்பதை மெய்ப்பித்தும், தமிழகத்துத் தொன்மை நூலான தொல்காப்பியத்திற் சாதிப் பிரிவு தொழில் பற்றியதே என்பதை நிரூபித்தும், சைவ வைணவ நூல்களில் சாதி வேற்றுமை காணப்படவில்லை என்பதை எடுத்தியம்பியும், உலக வழக்கில் சாதிப் பிரிவினை கிடையாது என்பதை உணர்த்தியும், இச் சாதி வேற்றுமைகளை ஒழிக்கும் வழிகளை அறிவுறுத்துக்கோலி, ஏழு இயல்களாகப் பகுத்து, பண்டை நூல்களை நன்கு ஆராய்ந்து, அக்காலத்திலிருந்து இதுகாறுந் தமிழர், ஆரியர் என்னும் மக்கள் இருந்த நிலைமையினையும். சாதி வேற்றுமை என்னும் தொத்து நோய் தமிழரால் உண்டான வகைகளையும். பிறப்பளவிற் சாதி வேற்றுமை எங்கும் இல்லாமையையும் செவ்விதிற் எடுத்துக் காட்டி, தனித் தமிழ் மொழியில் மறைமலை அடிகளால் ஆக்கப்பட்டு, அச்சிடப் பெற்றிருக்கிறது. இச் சிறு நூலைக் கொண்டே தமிழர் ஆரியர் வரலாற்றையும் நன்கறி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சன்மார்க்கத் தொண்டு எனக்குண்டு. அத்தொண்டுக்குப் பொன் பொருள் வேண்டுவதில்லை. அமைப்புகள் வேண்டுவதில்லை. அங்கமு வேண்டுவதில்லை. இவையெல்லாங் கொண்டோ புத்தர் கிறிஸ்து மகம்மது முதலியோர் அறநெறி வளர்த்து வந்தார்? தற்கால அமைப்பு முறைகள் நாத்திகத்தையும் போர் பூசல்களையும் விளைத்தலை அநுபவத்தில் யான் கண்டிருக்கிறேன். முன்னோர்கள் அடிச்சுவட்டைப்பற்றியே தொண்டாற்ற வேண்டுமென்னும் முடிவில் நிலைத்து நிற்கிறேன். "பழைய பித்தன்" என்று சொல்வோர் சொல்க.

எனக்கினிய அத்தொண்டிற்கென ஆண்டவன் என்னைப் பண்படுத்தியிருக்கிறான் என்று எனக்குத் தோன்றுகிறது. பல பாடநூல்களெழுதல் வேண்டும் என்னும் நோக்கோடு ஒரு கல்லூரியில் தமிழாசிரியனாயிருந்த என்னைத் திடீரெனத் "தேசபக்தன்" ஆசிரியனாக்கியது எது? "தேசபக்தன்" ஆசிரியனாயிருந்த வேளையில் எனது மனைவி மக்களை என்னினின்றும் பிரித்து அவர்களை விண்ணுலகுக்கேற்றியது எது? பின்னை "தேசபக்தன்" ஆசிரிய பதவியை ஒரு நொடிப்பொழுதில் துறக்கச் செய்தது எது? அதன் பின் "நவசக்தி" யைத் தந்தது எது? தற்செயலெனக் கூறுவோர் கூறுக; ஊழென உரைப்போர் உரைக்க. யான் ஆண்டவன் அருளென்றே கொள்கிறேன். தோன்றாத் துணையாக நின்று என்னை இயக்கிவரும், ஆண்டவன் அருள் என்னை நெகிழ விடாதென்னும் உறுதி எனக்குண்டு. அவ்வருட்டுணை கொண்டு எனக்கினிய தொண்டை யான் ஆற்றி வருவேன்.

யான் போதகாசிரியனாயிருந்த போது உலகில் இத்துணை பொய்மை புனை சுருட்டு வஞ்சனை சூது மோசம் இருக்குமென்று எனக்குத் தெரியாது. அரசியல் தொண்டில் தலைப்பட்ட நாள் தொட்டு இன்றுவரை, அதாவது ஒன்பது ஆண்டில் உலக நிலை இஃதென்பது எனக்குச் செவ்விதிற் புலனாகிவிட்டது. யான் பிறந்த நாட்டுக்கு ஆற்றவேண்டிய தொண்டு இஃதென்றும் விளங்கி விட்டது. அத்தொண்டாற்றிக் காந்தியத்தை நாட்டில் நிலை பெறுத்த வேண்டுமென்பது எனது தவம். அத்தவ நெறியில் யான் புகுகிறேன்.

அத்தவ நெறி நின்று "நவசக்தி" வாயிலாகத் தமிழ்நாட்டுக்குத் தொண்டு செய்வேன். பிறவற்றைப்பற்றி "நவசக்தி" வாயிலாக அவ்வப்போது தெரிவித்து வருவேன்.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் காரியக் கூட்டத்தினின்றும் விலகுதலைப்பற்றி மற்றவர் என்ன கருதினுங் கருதுக. ஒரு கட்சி புக நான் விலகவில்லை என்பதை மாத்திரம் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

திரு. வி. கலியாணசுந்தரன்.

---

ந்து கொள்ளலாம். இப் புத்தகத்தினைத் தமிழுலகம் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமென்பதில் ஐயமில்லை. இதன் விலை ரூபாய் ஒன்று. கிடைக்குமிடம்:—

மறைத்திருவாளர். சுவாமி வேதாசலனார்,
பொது நிலைக் கழக ஆசிரியர்,
பல்லாவரம்.

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்லென்ஸ்.

——:o:——

சென்ற மாதம் இறுதியில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானங்களில் 3 முக்கிய சத்துருக்கள் (எஸ்லென்ஸ்) உள.

1. ஸ்ரீமான் திரு. வி. கல்யாண சுந்தர முதலியாரின் பட்டம் விடுந்தீர்மானம்.
2. டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் ராஜீனாமாவின் புனராலோசனை.
3. ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களை தேசப்பிரஷ்டம் செய்வது.

முதலாவது காங்கிரசின் கௌரவத்தைக் காப்பதும், ஒத்துழையாமை யென்பது இன்னும் உயிரோடிருக்கிற தென்பதை ஓட்டர்களுக்குத் தெரிவிப்பதும் தமது கடமையாகக் கொண்ட ஸ்ரீ முதலியார் காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தேர்தலுக்கு நிற்கிற சட்டசபை மெம்பர்கள் பட்டம் பதவி இதுகளை விட்டு விட வேணுமாய்த் தீர்மானம் கொண்டு வருவதாக பத்திரிகைகளுக்கு எழுதியவுடனே, அநேக மாறுதல் வேண்டாதாரும் மாறுதல் வேண்டா பத்திரிகைகளும் முதலியாருக்கு "ஜெய்" போட்டார்கள். "தமிழ்நாடு", "குடிஅரசு," முதலிய பத்திரிகைகளும், காக்கம்பம், சிரக்கம்பம் செய்தன. ஏனெனில் அவற்றின் ஆசிரியர்கள் முதலியாருடன் நெருங்கிய நட்பினர்கள் ஆனதால் அவ்வளவு நம்பிக்கை வைத்து இத்தீர்மானம், ஒன்று நிறைவேறாது, அல்லது நிறைவேறினாலும் நடவாது, இரண்டுமில்லாவிடில் காங்கிரசைக் காப்பாற்று முகத்தான் முதலியார் சுயராஜ்யக் கக்ஷியை விட்டு விலகி விடுவார் என்று நினைப்பது சகஜந்தானே! ஆனால் என்போன்றவர்கள் அப்படி நினைக்கவில்லை. நாங்கள் நினைத்தது, தீர்மானம் பிரேரேபிப்பதற்கு முன்பே வாபீஸ் ஆய்விடும், அல்லது இப்போது ஏற்பட்டபடியே "வழ வழ" முடிவுடன் முதலியார் திரும்புவார் என்பதே. ஏனெனில் ஸ்ரீ கந்தசாமி செட்டியார் சொல்லியது போல் "மூளையில்லாத பிராமணரல்லாதாரை" முதலியார் ஏமாற்றலாமே யன்றி, மூளையுள்ள பிராமணரை ஏமாற்ற ஒருக்காலும் முடியாதென்று முன்னமே அறிவோம். ஆனால் இவைகள் எம் போன்றவர்களுக்குத் தெரிந்தாலும் ஸ்ரீ நாயக்கர் போன்றவர்கள் எளிதில் நம்பி விடுகிறார்கள். ஆனால் அதுவும் இயற்கைதான். எப்படியெனில் நன்றாகப் படித்தவர்கள், ரயிலுக்குப் போவதானால் ஸ்டேஷனிலிருந்து ரயில் புறப்படும் நிமிஷத்தைப் பார்த்துக் கொண்டு ஸ்டேஷனுக்குப் போவதால் பல தடவைகளில் பிரயாணம் தவர்ந்து விடுகிறது. சாமானியர்கள் ஒரு மணிக்கு முன்னாடி ஸ்டேஷனுக்குப் போய் விடுவதால் தவறுவதே கிடையாது. அதுபோலவே, காரியாதிகள் நடக்கின்றன.

ஸ்ரீமான் முதலியார், காங்கிரசின் கௌரவத்தைக் காக்கப்போய், கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல் காங்கிரசின் கௌரவம் போய்விட்டது. எப்படியெனில்:—

இதற்கு முன்னால் சிலராவது பழைய நினைப்பில் பட்டம் பதவியுடையவர்கள் காங்கிரஸ் அபேட்சகராக நிற்கக் கூடாது என்று நினைத்திருப்பார்கள். இப்போது ஸ்ரீ சத்திய மூர்த்தி பிரசங்கத்தையும், தலைவர் பிரசங்கத்தையும், முதலியார் திருப்தியையும், "நவசக்தி"யின் வியாக்கியானத்தையும், பார்த்தால் ஸ்ரீமான்கள் கந்தசாமி செட்டியாரும், வெங்கிட்டராமய்யரும், அநியாயமாய்ப் பட்டத்தை விட்டோமென்று விசனப்படுவார்களென்பதில் சந்தேகமில்லை. ஆ! காங்கிரசின் கௌரவமே! பிழைத்திருந்தவாறென்னே! பளா!! பளா!!!

(1) அருமை நாயக்கரே, பிராமணரல்லாதாரே, ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் மாயவரம் பிரசங்கத்தில் சொன்னது சரிதானா? தப்பா?

(2) டாக்டர் நாயுடுவின், ராஜீனாமாவைக் கவனிக்கலாம். ஸ்ரீமான் நாயுடு குருகுலச் சண்டையிலிருக்கும்போது, தமிழ்நாட்டுத் தலைவர் பதவியை ராஜீனாமா செய்யும்படியும், நம்பிக்கையில்லாத் தீர்மானமும் செய்த கமிட்டிக்கு, இன்று திடீரென்று அவர்பேரில் கருணை பிறந்த காரணம், ஆண்டவனே அறிவார். ஏனெனில் திரிசங்கு சுவர்க்கத்திலிருப்பதால் அப்படியே வைத்திருக்க எண்ணம் போலும். ஆனால் நாயுடு அவர்கள் இரண்டிற்கும் மத்தியிலிருந்து, அடிக்கடி பளிச் பளிச் என்று காட்டிக்கொண்டிருப்பதைப் பற்றி எல்லாரும் சந்தோஷமடைகிறார்கள். எப்படியெனில், ஒரு இடத்தில் நாயுடு பிரசங்கம் செய்ததில் வகுப்புவாரியைக் கண்டித்தார் என்பதை பிராமணப் பத்திரிகையில் பிரமாதமாய்ப் புகழ்ந்து எழுதிவிடுவதும், பிராமணரல்லாதார் அதிருப்திக் காளாகாமல், "ஒருமறுப்பு," "அப்படிப் பேசவில்லை" யென்று தந்தி போய் "திராவிடன்" முதலிய பத்திரிகைகளில் பிரமாதமாய் எழுதிவிடுவதையும் பார்த்தால், ஏதோ செப்பிடிவித்தை நிபுணர்கள் இருப்பதாகத் தெரிகிறது. எப்படியும் நாயுடு அவர்கள் பாடும் திண்டாட்டத்திலிருக்கும்படி செய்து விட்டார்களென்பதில் சிறிதும் ஐயமில்லை.

(3) இனி ஸ்ரீமான் நாயக்கரைக் கழுவேற்றுவதைக் கவனிப்போம்:— இத்தீர்மானம் வேண்டுவதேயில்லை. இப்போதிருக்கிற காங்கிரசுக்கு நாயக்கர் முற்றிலும் விரோதியென்றும், இதை யொழித்து பழைய காங்கிரசைக் கொண்டுவரப் பிரயத்தனப்படுவதாயும், அதுவரை தமது முழுபலத்தையும் பிரயோகம் செய்தே தீருவதாகவும், ஒரு முறைக்குப் பன்முறை பேசியும் எழுதியும் வந்திருக்கிறார். உண்மையில் பார்க்கும்போது, தேசத்திற்காகப்பலமுறை ஜெயிலுக்குப் போயும் வக்கீல் தொழில் முதலியவற்றை விட்ட(?) தலைவர்களாகிய ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், அரங்கசாமி அய்யங்கார், சத்திய மூர்த்தி, ஆச்சாரி, பாவலர், ஷாபி, அமீத்கான், சாமி(!) முதலியோரிருக்கிற இக்கூட்டத்தில் இதுவரை ஒரு தியாகமும் செய்யாது உத்தியோகவேட்டை, பதவி வேட்டையாடுகிற ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கர், ராமநாதன், சக்கரைச்செட்டியார், ஆரியா, வரதராஜுலு நாயுடு முதலியவர்களுக்கு என்ன வேலை!" ஆகையால் தான் இவர்களெல்லோரையும் அக்கூட்டத்திலிருந்து விலக்கி விட்டுக் காங்கிரசின் கௌரவத்தைக் காப்பாற்றப் போகிறார்கள். பேஷ்! பேஷ்!!.

துர்ரதிர்ஷ்டம் பிடித்த இந்தியாவே! உனக்கு நல்லகாலம் என்று வருமோ! ஈஸ்வரனுக்குத் தான் தெரியும்! தின்றதுக்கு முதலாத பட்டம் பதவிகளை விட மனமில்லாமல் சூழ்ச்சி செய்கிற இக்கூட்டத்தார், உடல் பொருளாவிகளை உனக்காக விட்டு சட்ட மறுப்பிலிறங்கி உன்னைப் படுகுழியிலிருந்து மீட்பதாகச் சொல்லுகிறார்களே. அவர்களுக்கும், அதை நம்பி அடுத்ததேர்தலுக்கு ஓட்டுக்கொடுக்கும்படி பிரசாரம் செய்கிற புல்லுருவி தேசபக்தர்களுக்கும், அவர்களைப் பின்பற்றி ஓட்டுப் போடும் ஓட்டர்களுக்கும் நீ நல்ல புத்தி கற்பிப்பாயாக!!! திருப்பதி.

## தந்திரப் பிரசாரமும் ஸ்வதந்திரப் பிரசாரமும்.

சட்டசபைப் பிரவேசத்தைக் காங்கிரஸ் அனுமதித்ததும், பிறகு ஏற்றுக்கொண்டதும் பெரும் பிழைகள். நாளுக்கு நாள் இது அதிகரிக்கும் பிரகாசத்துடன் விளங்கி வருகிறது. ஆனாலும், பிழை ஏற்பட்டுப் போன பின் அதற்குக் கீழ்படிந்து அதிலிருந்தும் ஒரு பயனைத் திரட்டலாம் என்று யோசனை கொண்டதுண்டு. அதாவது தேர்தல் பிரசாரத்தை ஒரு தீவிரமான ஸ்வதந்திரப் பிரசாரமாக நடத்தலாம் என்பதே.

ஆனால் காங்கிரசால் நியமிக்கப்பட்டிருக்கும் அபேக்ஷகர்களில் பெரும் பாலோர் தந்திரக் களஞ்சியமாகவே இருக்கிறார்கள். ஸ்வதந்திர உணர்ச்சியையே கொலை செய்து விடுகிறார்கள். திரளும் ஒற்றுமையைக் குலைக்கும் பிரசாரம்தான் நடக்கின்றது. தேர்தல் பிரசாரம் அமேத்தியக்காடாக வாய்த்திருக்கிறது. காங்கிரஸ் அபேக்ஷகர்கள் பட்டங்களை விட்டாலும், சர்க்கார் நியமனங்களை விடாமலும், அந்தரங்க பிரசாரத்தை விடாமலும், கள் முட்டிகளை விடாமலும் இருப்பார்களேயானால் காங்கிரஸ் சட்டசபைத் தேர்தலை விட்டு ஓடிவிடுவதே நலந்தரும். இல்லையேல் எலெக்ஷன் நாற்றம் காங்கிரசையும் பீடித்துவிடும்.

வி. மகாலிங்கய்யர்.

## கணபதி.

கோவைக்கடுத்த கணபதி கிராமத்தில் 11-7-26-ந் தேதி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடும். கோவை தாலூகா போர்டு பிரசிடெண்டு திரு. வி. சி. பழனிச்சாமி கவுண்டர் அவர்கள் கணபதி ஸ்ரீவாணி நிர்த்தன வாசகசாலையைத் திறந்து வைப்பார் என ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

## சென்னை சட்டசபைத் தேர்தல்.

கோவை முனிசிபல் சேர்மேன் திருவாளர் ராவ் பஹதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் சென்னை சட்டசபைக்கு கோயமுத்தூர் ஜில்லாவின் மகமதியரல்லாதார் தொகுதியின் மூன்று ஸ்தானங்களில் ஒன்றிற்குத்தான் ஒரு அபேக்ஷகராய் நிற்பதாக அறிவிக்கப்படுகிறோம்.

## முஸ்லிம் பெண்களும், காதணியும்.

(கொழும்பு ஜனாப் முஹம்மது ஸாலிஹ் எழுதுவது.)

தமிழ்நாட்டு முஸ்லிம் பெண்மக்கள் பெரும்பாலோர் ஒருவித அழகற்ற ஆபாசமான அல்லிக்குத்தென்ற ஒன்றை சர்வ சாதாரணமாய் காதுகளில் அணிந்துவருகின்றனர். இதை அழகிற்காக அணிவதாய்ப் பிரஸ்தாபிக்கின்றனர். ஆனால் அன்னார் கூறுவதேபோல் அது ஸ்திரீகளுக்கு அத்தனை அழகாயும் தோன்றவில்லை. அவ்வாறு அழகாயிருப்பினும் இயற்கையாய் அமைந்துள்ள காதுகளைத் துளைத்து பல உபத்திரவங்களுடே அதை அணியவேண்டுமென்பதாய் என்ன அவசியமிருக்கிறது. நாம் நம் தேகத்தில் ஓர் குண்டூசியைக்கொண்டு ஒரு முறைப் பிரயோகித்தால் நமக்கு எவ்வளவு நோவுண்டாகிறது. இஃதேபோல் நாம் சிறுமிகளுக்கு இரண்டு மூன்று டஜன் துவாரங்களைத் துளைக்க, எவ்வளவு நோவும், வேதனையுமுண்டாகுமென்பதை உணர்ந்து பாருங்கள். இத்தகைய கஷ்டங்களைக்கொண்டு வருத்தித்தான் அச்சிறுமிகளை அழகுறச் செய்யவேண்டும்போலும்! இதைவிட சித்திரவதை வேறென்ன விருக்கிறது? மற்றைய தேசத்துப்பெண்கள் அழகுறச்செய்ய வேறு வழிகளில்லையா? ஆடைகளாலும் அங்க அமைப்டகளுக்கு ஹானியுண்டாகா வண்ணம் அணிந்துகொள்ளும் அணியாபரணங்களாலும் அழகுபெறச் செய்யமுடியாதா? ஆண்டவனால் அதியழகாய் சிருஷ்டித்துள்ள இயற்கையை மாற்றி செயற்கையாலென்ன அழகை செய்துவிடப்போகிறீர்கள்? இது பெரும் மதியீனமன்றோ? காதுகளைத் துளைத்து சேதப்படுத்தியதுமல்லாமல் அவைகளுக்குத் தங்கத்தினால் செய்த காதணிகளையும் நூற்றுக்கணக்கான ரூபாய்களை செலவுசெய்து போடுகிறார்கள். இவ்வழக்கத்தினால் ஏழைகளின்பாடு நிரம்பவும் கஷ்டமாகின்றது. பணம் படைத்தவர் எவ்வாறாயினும் விநியோகஞ்செய்வர். பொருளற்ற ஏழைகள் என் செய்வது? கடன் பட்டாவது காரியத்தை முடிக்கவேண்டுமன்றோ! வெள்ளிவாளிப் போட்டாலோ பிள்ளை விவாஹஞ்செய்து கொள்ள மறுக்கிறான். என்செய்வார்கள், கடன் வாங்கி ஒருவாறு காரியத்தை முடித்துவிட்டு கடைசியில் கண்பிதுங்க விழிக்கிறார்கள் அந்தோ! பரிதாபம் ஈதெல்லாம் பணத்திமிர்கொண்ட வர்க்கத்தினால் நேரும் கஷ்டமன்றோ ஏழைகளுக்கு?

நிதிபடைத்த தனவான்கள்தான் அன்னாரிடம் பணமிருக்கின்ற தோரணையில்தம்பெண்களுக்குத் தங்கத்தகடாய் செய்தேனுஞ்சரி, பொதிந்துகொள்வார்கள். பொருளற்ற பரம ஏழைகள் வெள்ளியினாலேனும் செய்தால் மணமகன் ஒப்புக்கொள்வானோவென்றால் அதுவும் முடியாதகாரியம். குருடனானாலும் அரசனைப்போல் விழித்துத் தானாகவேண்டுமென்பர். அவ்வாறாயின் ஏழைகள் எங்கு போவது? ஆகவே, இம்மாதிரி தொல்லைகளில் மாட்டிக்கொண்டு ஏன் நாம் மாளவேண்டும்?. பணக்காரரின் பணத்திமிர் அன்னாரோடு இருந்துகொள்ளட்டும். நாம் ஏன் அன்னாரைப் பின்பற்றியொழுகவேண்டும்? ஏழைகள் ஒற்றுமையாகிவிட்டால் பணக்காரர்கள் வழிக்கு[illegible]னே வந்துவிடுவார்கள். ஆதலின் வருங்காலத்திலாவது இக்காதணிகளிடுவதற்காக நம்பெண்[illegible]ன் காதைத்துளைத்துத்துளைத்து உபத்திர[illegible]தாதிருத்திவிட ஒவ்வொரு ஆண்மக்களும் ஊக்கமெடுக்கும்படி ஆண்டவன் அருள்புரியவேண்டும்.

சிறுமிகளுக்குக் காது குத்துவதைப்பற்றி புருஷர்கள் அலக்ஷியமாய் இருப்பதினாலேயே பெண்களும் அத்துர்வழக்கத்தைப் பிடிவாதமாய்ப் பிடித்துக்கொள்கிறார்கள். நாம் அதை அவ்வாறு செய்யவே கூடாதெனக் கண்டிப்பாய் விலக்கிவிடும் பக்ஷம் நம் பெண்கள் மீறுவார்களோ? ஒருநாளும் மீறிநடக்கவேமாட்டார்கள். நாம் பாரா முகமாய் இருப்பதின் காரணத்தினாலேயே இப்பிடிப்புகள் நம் சமூகத்தைப்பற்றி பிடித்துக்கொண்டு அகலாதிருக்கின்றன. புருஷர்களாகிய நாம் பலவந்தமாய் செய்யவேகூடாதென இதை நிறுத்தியே விடவேண்டுமெனக் கங்கணங் கட்டுவோமாயின் இதை நீக்கிவிடுவது எம்மாத்திரம்! ஆதலின் புருஷர்கள் இனியாவது வாளாவிருப்பதை விடுத்து இவ்விஷயத்தில் ஊக்கம் செலுத்துவார்களென நம்புகிறோம்.

பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தில் மற்றெல்லா மதங்களையும் விட. மனிதனை மனிதன் ஹிம்சிப்பதை பலமாய்க் கண்டித்திருக்கிறது. இவ்வாறிருந்தும், நம் சிறுமிகளுக்கு, காதைக் குத்தி இம்சிப்பது தர்மமாகுமா? மற்றைய சமூகத்தினருங்கூட, தற்காலத்தில் இப்படிப்பட்ட அருவருக்கத்தக்க செவியைத் துளைத்து அழகுசெய்வதை நிறுத்தி இலேசான முறையில் நவநவமான அழகை சிருஷ்டித்து வருகிறார்கள். உதாரணமாக ஹிந்துக்கள் சிறுமிகளுக்கு காதை வடித்து பாரமான ஈயத்தால் செய்யப்பட்ட வளையல்களை (Lead rings) போட்டு, சிறுகச் சிறுக நாளடைவில் தோளில் வந்து தொடும்படியாகச்செய்து அப்பால் கனத்த தங்க நகைகளைப்போடுவது வழக்கமாயிருந்து வந்தது. தற்போதையில் அம்மாதிரி முறைகளை இக்கால சிறுமிகளுக்குக் கையாளாது ஒரு சோனைகளிலும் இரண்டே துவாரங்களைமாத்திரம் இட்டு சிறியவோர் நகையைப்போட்டுவிடுகிறார்கள். அதனால் அச்சிறுமி யாதொரு தொந்திரவும் இல்லாமலும், தோற்றத்திற்கு மிக ரம்மியமாயும் தோன்றுகின்றன. இவ்வாறு காலக்கிரமத்தில் நாமும் சீர்திருத்த வேண்டாமா? ஒரு காலத்தில் மடமையின் மயக்கத்தால் சீர் திரு(நாகரிக)த்தத்தை குழிதோண்டிப் புதைத்துவிட்டு குப்புற விழுந்து நித்திரை செய்து கொண்டிருந்தோம். நாகரீகமுதிர்ந்த (விழித்த பின்னரும்) இன்னான்றும் அவ்வாறே அந்தகாரத்துள் ஆழ்ந்திக்கிடப்பதா? என்னே! ஒவ்வொரு சமுதாயத்தவரும், நம் பார்வையில் முன்னேற்றத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில், நம் சமூகம் மாத்திரம் ஏன் தளர்வுற்றுத் தள்ளாடி நிற்கவேண்டும்? நாமும் மற்றவர்களைப்போல் முன்னேறவேண்டாமா? இவ்வாறு எத்தனைக் காலத்துக்குத்தான் வாளாவிருப்பது? இன்னும் இம்மாதிரி ஊக்கமற்றுக்கிடப்போமானால் மற்றசமூகத்தார் எள்ளி நகைக்க, நாமே நாண்டியவராவோம். ஆதலின் சகோதரர்களே! நெடுநாள் நித்திரையால் விளைந்த பங்கம் போதும். இனியாவது விழித்து தத்தம் கண்களைத் துடைத்துக் கொண்டு நம் சமூக சீர்கேட்டைத் திருத்தியமைக்க வழிதேடுவதோடு, சித்திரவதையிலும், ஹிம்சையிலும் முதற்தரமான சொல்லாமல் கொல்லும் கொடுந்தொழிலான "காது குத்தல்" என்னும் ராக்ஷஸ செய்கையை நம் சமூகத்தை விட்டும் இனி எக்காலத்தும் தலைகாட்டாதிருக்க, நம்முஸ்லிம் சகோதரர்கள் தேசமதசேவையோடு இதையும் ஒரு முக்கியத் தொண்டாகக்கொண்டு உழைப்பார்களாக.

"நாஜுல் இஸ்லாம்"

## கிறிஸ்தவ மதப் பிரசாரமா?

என்ற மகுடமிட்டு, சென்னைப் பார்ப்பன மித்திரன் சென்ற 5-7-26-ல் குறிப்பொன்றெழுதி, சென்னைக்கடற்கரையில் ஸ்ரீமான் ஆரியா இந்துமத அநுஷ்டானங்களைப்பற்றியும், இந்து தெய்வங்களைப்பற்றியும், குறிப்பாக விக்ரஹ ஆராதனையைப் பற்றியும் தூஷித்துப் பேசியதாகவும், அவர் பேச்சைக் கேட்டு ஜஸ்டிஸ் கட்சியினர் ஆனந்தங்கொண்டதாகவும், இத்தகைய கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்ய ஸ்ரீமான் ஆரியா தங்களோடு காங்கிரசிலிருந்த காலத்தில் தைரியங்கொள்ளவில்லையென்றும், இந்து மதத்தை ரட்சிக்குமுகத்தான் எச்சரிக்கை செய்திருக்கிறான்.

இக்குறிப்பில் அயோக்யத்தனமும் சூழ்ச்சியும் ததும்பி வடிகிறது. யோக்யமானவன் ஆரியாவின் பேச்சுக்களை முற்றிலும் பிரசுரித்து, தகுந்த ஆதாரத்தோடு கண்டித்திருப்பான். அவ்வாறின்றி, "தூஷித்தார், மதப்பிரசாரம் செய்தார், ஆனந்தங்கொண்டனர், சட்டிக் கூழுக்கு மதத்தைப் புறக்கணித்தது யார்" என்று எழுதி பொதுவாகக் கிறிஸ்தவ மதத்தின் பேரிலும், சிறப்பாக ஆரியாவின் பேரிலும் பொதுமக்களிடையே துவேஷத்தை விளைவிக்கப்பார்ப்பது எவ்வளவு அயோக்யத்தனமும், சூழ்ச்சியுமானதென்று கவனியுங்கள்.

மேலும், இந்து மதமானது போலி அநுஷ்டானங்களிலும், வெறும் விக்கிரகங்களிலும் அடங்கிக்கிடக்கவில்லை. போலிவேடங்களை ஒருவர் கண்டிப்பதாலேயே இந்துமதம் கவிழ்ந்து கிறிஸ்தவ மத மோங்கிவிடாது. இன்று ஆரியாவைக் கண்டிக்கும் இதே பார்ப்பனன், இன்று இந்துப் பறையனாயிருக்கும் கோவிந்தனை பக்கத்தில் வராதே என்று விரட்டுகிறான். அந்த கோவிந்தன் நாளைய தினம் மோசஸ் ஆகிவிட்டால் கைலாகு கொடுப்பான். ஆகவே கிருஸ்தவ மதத்தை இப் பார்ப்பனர்கள் ஆதரிக்கிறார்களா அல்லது ஸ்ரீமான் ஆரியா ஆதரிக்கிறாரா? இதிலிருந்து இந்து மதத்தைப் பரிபாலிப்பதாகச் சொல்லும் இப்பார்ப்பனனுடைய வாய் வேதாந்தத்தையும், அநுஷ்டானத்தையும் பார்த்தீர்களா? இவ்விதப்பார்ப்பன அநுஷ்டானங்களை ஆரியா கண்டித்திருந்தால் அது இந்து மதத்தை சிலாக்கியப் படுத்தியதேயாகும்.

## வேண்டுகோள்.

சென்ற வருஷம் ஆடி மாதம் மாரியம்மன் பண்டிகையின் நிமித்தம் சேலத்தில் வழக்கம் போல் நடைபெற்ற ஆடு கோழி இனங்களின் பெருங் கொலைகளை தடுக்குவான் வேண்டி சேலம் நகரிலுள்ள பல சங்கத்தினர்களும் தொண்டாற்றி வந்ததை, சேலம் வாசிகள் மறக்க முடியாது. இப்புனித காரியத்தை மேல் கொண்ட சகோதர சங்கங்களுக்கு சேலம் ஜீவகாருண்ய சங்கத்தின் சார்பாக என் வணக்கமுள்ள வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அத்துடன் இவ்வருஷம் என் வேண்டுகோளும் ஒன்றுண்டு.

இப்புனிதமான பெரிய தொண்டாற்ற பல சங்கங்களின் உதவியும், மகாஜனங்களின் ஆதரவும் அவசியம் வேண்டியிருக்கிறது. சென்ற வருஷம் தனித் தனியாக தொண்டு புரிந்த சங்கங்கள் இவ்வருஷம் ஒன்று சேர்ந்து முயற்சி செய்து வந்தால் நம் முயர்ச்சி பெரும் பயனை அளிக்கும். ஆங்காங்கு கூட்டங்களை கூட்டவும், உபந்நியாசங்கள் நடத்தவும், பிரசாரம் செய்யவும், நிதி வசூலிக்கவும், கொலைநாளில் கொலைக்களத்தில் உயிர் பிச்சைக்கு மன்றாடவும் சாதகமாயிருக்கும். ஆதலால் ஒவ்வொரு சங்கத்தார்களும் சென்ற வருஷம் போல் இவ்வருஷமும் முன் வந்து உதவி புரியும்படி பணிவுடன் கோருகிறேன். வை. நடேசன்.

## "இந்து"வின் இழிதொழில்.

—————0—————

ஐயங்காராகிலென்? ஐயங்கார் பத்திரிகையாகிலென்? பிறவிக்குணமாகிய குறும்பும், சூழ்ச்சியும், அற்பத்தனமும் அவர்களை விட்டு அகலாவன்றோ! நாளுக்கு நாள் நமது இயக்கம் பலப்பட்டு ஆழமாய் வேரூன்றி வருவதைக்காண "இந்து" சகிக்கவில்லை. அடிவயிற்றில் நெருப்பையிட்டாற் போலிருக்கிறது அதன் நிலைமை. போர்க்களத்தில் தோல்வியுற்று எதிரில் முதுகுகாட்டி ஓடுகையில் வழியிலகப்பட்ட கல்லையும் மண்ணையும் வாரியிறைப்பது போல், "இந்து"வும் நமது மந்திரிகளின்மீது வசை புராணங்கள் பாட ஆரம்பித்துவிட்டது. அப்பத்திரிகை 2 நாட்களுக்கு முன் எழுதியிருப்பதில் எள்ளவும் உண்மையில்லையாதலால் அதை வசை புராணம்,—அற்பத்தனமான வசை புராணம்— படுமோசமான பொய் மூட்டையென்றே கூறுவோம். லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் நமது மந்திரிகளின் ஆட்சியைப் புகழ்ந்து அப்பத்திரிகைக்கு எழுதியிருப்பது "இந்து"வின் ஆசிரியருக்கு எப்படி இருக்கும்? இவருடைய கண்களில் நெருப்புப் பொறி பறக்கிறது. எப்படியாவது நமது மந்திரிகளையும், நமது கட்சியையும் இழிவுபடுத்த வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டுவிட்டார் 'இந்து'வின் ஆசிரியர். இவருடைய தூற்றுதலுக்கும் பயமுறுத்தலுக்கும் நாம் அஞ்சவில்லை. ஆனால் பொறுமை தலைக்கேறிய இவ்வாசிரியர் அநியாயமாய் நமது தலைவர் பனகால் அரசர்பால் சுமத்தியிருக்கும் பழிக்குத்தக்க பதிலிறுக்க வேண்டியது அவசியமாகும். கனம் பனகால் அரசர் வைசராயைக் கண்டு பேசுவதற்கு சிம்லா சென்றிருப்பதை எல்லாரும் அறிந்தேயிருக்கிறார்கள். அவர் இந்துமத தர்ம பரிபாலன சட்டத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு பிறிதொரு மசோதா கொண்டுவருவதன் சம்பந்தமாய் வைசிராயுடன் கலந்து பேசச்சென்றுள்ளார் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாயிருக்கிறது. பிரதம மந்திரியார் எந்த ஹோதாவில் யார் செலவில் சிம்லாவுக்குச் சென்றார் என்று "இந்து" கேட்டிருக்கிறது. இது எத்துணை அயோக்கியத்தனமான, அற்பத்தனமான, இழிவான கேள்வியாகும். சிம்லாவுக்குச் சென்றவர் பனகால் அரசர் ஒருவர்தானா? சென்னை அரசாங்க அங்கத்தவர்கள் வேறு யாரும் வைசராயுடன் கலந்து" பேசச் சிம்லாவுக்கோ அல்லது டெல்லிக்கோ செல்லவில்லையா? கனம் சர் சி. பி. இராமசாமி அய்யர் இரண்டு தடவை சிம்லாவுக்குச் செல்லவில்லையா? அவர் எதற்காகச் சென்றார்? ஹைட்ரோ எலக்டிரிக் திட்டத்தையும் நீர்ப்பாசான மசோதாவையும் பற்றி வைசராயுடன் ஆலோசனை செய்யவா அல்லது சுயநலத்தின் பொருட்டா? வைசராயின் நிருவாக சபையில் அப்போது ஓரிடம் காலியாகவிருந்தது. இரண்டாவது தடவை செல்கையில் இந்தியா மந்திரியின் சபையில் ஓரிடம் காலியாகவிருந்தது. தவிரவும் சர். பட்டம் சென்னையில் பெறுவது பாவம் என்று சிம்லாவில் போய்ப் பெற்றுக்கொண்டார். அந்தக்காலத்தில் "இந்து" என்ன செய்துகொண்டிருந்தது? எந்த ஹோதாவில், யாருடைய செலவில் சர் சி. பி. சிம்லா சென்றார் என்று கேட்டதா? இல்லை, இல்லை, "இந்து"வின் ஆசிரியரும் பார்ப்பனர் சட்ட இலாகா அங்கத்தவரும் பிராமணர். இனம் இனத்தைக் காட்டிக்கொடுக்குமோ? அப்போது மௌனமாயிருந்த "இந்து" இப்போது வரி செலுத்துவோருக்காக நீலிக் கண்ணீர் வடிக்கப் புறப்பட்டுவிட்டது விந்தையன்றோ?

இதைவிட கேவலமான இன்னொரு பழியையும் "இந்து" கனம் பனகால் அரசர்மீது சுமத்தியிருக்கிறது. 'சிம்லா" தெய்வங்களுடன் கலந்து பேச இருக்கும் பிறிதொரு காரியம் திரு. யாகூப் ஹாசன்மீதும் பிறர்மீதும் இருந்து வரும் தடையை எடுத்துவிடுவதன் சம்பந்தமாய் உள்ளது" என்று கொஞ்சமும் மானம், வெட்கம் இல்லாமல் பொய் சொல்லியிருக்கிறது. இதற்காகவும் நமது மந்திரி சிம்லா சென்றிருக்கிறார் என்பது உண்மையா என்பதை "இந்து"வின் ஆசிரியர் ரூபிக்கமுடியுமா? ஆசிரியருக்கு இந்தச்செய்தி எங்கிருந்து கிடைத்தது? யார் கொடுத்தார்கள்? இவற்றை "இந்து"வின் ஆசிரியர் உடனே அறிவிக்க முன்வர வேண்டும். சட்ட இலாகா அங்கத்தவர் சொன்னாரா? அல்லது உதகமண்டலத்திலிருந்து பிராமணக் காரியதரிசிகள் சொன்னார்களா? அல்லது இதை அறிவித்தவர்கள் யார்? இதை முழுப்பொய் யென்றறிந்தும் ஏன் "இந்து" இத்துணை இழிதுறையில் இறங்கிற்று? "இந்து"வைப்போலவே மற்ற தேசியப் பத்திரிகைகளும் நமது மந்திரிகளின் மீது இதே பழியைச் சுமத்தியிருக்கின்றன. அப்பத்திரிகைகளும் இதற்குத் தக்க சமாதானம் சொல்ல வேண்டுமென்று நாம் கேட்கிறோம். "சட்டமும், ஒழுங்கும் தேர்தலும்" சட்ட இலாகா அங்கத்தவரையே சேர்ந்தவையாகும். திரு. யாகூப் ஹாசன் தடை விஷயம் சட்ட இலாகா அங்கத்தவரைச்சேர்ந்ததே. அரசாங்கத்தார் பிறப்பித்த உத்தரவை சட்ட அங்கத்தவர் ஏற்றுக் கொண்டாரா? ஏற்றுக்கொள்ளவில்லையாயின் இவர் என்ன செய்தார்? மந்திரிகளின் மீது பழிசுமத்த முற்பட்டது சட்ட இலாகா அங்கத்தவரைக் கண்டனத்தினின்றும் காக்கவன்றோ? இது உண்மையா அல்லவா? நாலுகோடியே எண்பது லட்சம் மக்களுடைய பிரதிநிதிகள் என்றும் அவர்களுடைய விடுதலைக்கு நாமே தோன்றியுள்ளோமென்றும் நாம் சொல்லிக்கொள்ளவில்லை. அவ்வாறு சொல்லிக்கொள்வது மயிலாப்பூர் அய்யங்காரும் அவருடைய சாதியாருமே. அவ்வேலையை அவர்களே வைத்துக்கொள்ளட்டும். ஆனால் ஐரோப்பிய நிருவாக அங்கத்தவர்கள் செய்யவேண்டிய இழிந்த வேலையை மந்திரிகள் செய்ய விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று "இந்து"வின் ஆசிரியர் எழுதியிருப்பது அவருடைய எத்துணை இழிவான குணத்தை வெளியிடுகிறது? ஐரோப்பிய நிருவாக அங்கத்தர்வகளுடைய இழிந்த வேலையைத் தென்னிந்தியா முழுவதும் செய்து வருவது யார் என்பதை நாம் அறிவோம். நாம் "இந்து"வை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறோம். சட்டசபை அங்கத்தவராயிருந்த ஓர் கனவானுக்கு நியாய இலாகாவில் பெரியதொரு பதவி அளிப்பதாய் அரசாங்க உயர்தர அங்கத்தவர் ஒருவர் வாக்களித்தது உண்மைதானா? அதிலிருந்து அக்கனவான் மந்திரிகளுக்கு மிகவும் எதிரிடையாயிருந்து வந்தது உண்மைதானா? அந்த வாக்குறுதியினால் அவருக்களிக்கப்பட்ட இன்னொரு பதவியையும் ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று சொல்லப்பட்டது உண்மையா? ஐரோப்பிய நிருவாக அங்கத்தவர்களுடனும் பிறருடனும் "எதிர்ப்புக்கும் காத்துக்கொள்வதற்கும் ஒப்பந்தம்" செய்துகொள்ள வேண்டுமென்று மந்திரிகளுக்குத் தோற்றவில்லை. ஏனென்றால் அவர்கள் தங்கள் பிறப்புரிமையை விற்கவில்லை, விற்கவும்மாட்டார்கள். எதிர்க்கட்சியிலுள்ள அங்கத்தவர்களுடனும தனிப்பட்ட அங்கத்தவர்களுடனும் அதிகாரவர்க்கத்துடனும் "எதிர்ப்புக்கும் காத்துக்கொள்வதற்கும்" ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பவர்கள் இல்லையாவென்று 'இந்து'வைக் கேட்கிறோம். மந்திரிகளுக்கும் சட்டசபையிலுள்ள பிற அங்கத்தவர்களுக்கும் இடையில் கலகமூட்டி பிளவேற்படச்செய்து பிராமணரல்லாத மந்திரி சபையை ஆழமாகப் புதைத்துவிடப் பகீரதப்பிரயத்தனங்கள் செய்யப்படவில்லையா வென்று கேட்கிறோம். உண்மை இவ்வாறிருக்க 'ஒன்றுபட்டுவாழும் குடும்பம்' என்று 'இந்து' நம் மந்திரிகளின் மீது பழி சுமத்துவது எத்துணை ஒழுக்கங் கெட்ட செய்கையாகும்?

"திராவிடன்"

குறிப்பு:—"இந்து"ப் பத்திரிகை ஒன்றுதான் யோக்கியமான பத்திரிகை என்று நற்சாக்ஷிப் பத்திரம் கொடுத்த தமிழ்நாட்டு பண்டிதர்களை மேற்கண்ட விஷயத்தை இருமுறை வாசிக்குமாறு வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். ப-ர்.

---

## தர்மபுரியில மருத்துவ ஆஸ்பத்திரி

தர்மபுரியில் மேற்கண்ட ஆஸ்பத்திரி ஏற்படுத்தும் நிமித்தமாக கடகத்தூர் போர்டு எலிமெண்டரி பாடசாலைக்கட்டிடத்தில் இம்மாதம் 28-ந் தேதி புதன்கிழமை சர்க்கில் இன்ஸ்பெக்டர் திரு வி. எஸ். செல்லய்யா அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடும். ஹெல்த் இன்ஸ்பெக்டர் திரு. வைத்தினாதய்யர் மருத்துவ ஆஸ்பத்திரியின் உபயோகத்தைப்பற்றி பேசுவார் என்று கடகத்தூர் கார்னேஷன் சபையாரின் செக்ரட்டரி திரு. கே. எ. வெங்கட்டராம ரெட்டியார் தெரிவிக்கிறார்.

---


## கண் தைலம்.

சிறந்த அனுபவ நேத்ர ரோக நிவாரணி.

இம்மேன்மையான தைல ஸ்நாநத்தால் கண் நோய், கண் குத்தல், கூசல், நீர் வடிதல், கண் மங்கல், மேகநீரால் குருடாதல் அந்திமாலை, பீளை கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுதல், கண் சிவப்பு, கண் இமை புருவங்களில் வலி, கண்புகைச்சல், தலைநோய்களும் குணமாகிவிடும். கண் குளிரும். ஒரு டின் ரூ. 3. வி. பி. அணா 8.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

சற்குருவே துணை.

# ஸ்ரீ நமசிவாயகுரு தமிழ்சித்த ஆயுள் வேத வைத்தியசாலை, கோயமுத்தூர்.

இக் கோயமுத்தூரிலும் சென்னை முதலான விடங்களிலும் தீராதெனக் கைவிடப் பட்ட கோடிய வியாதிகளை வெகுசீக்கிரத்தில் சவுக்கியம் செய்து அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் பரிசுகளும் மெடல் சங்கிலி முதலியவை பெற்றவரும் ஸ்ரீ நமசிவாய குரு தமிழ் சித்த ஆயுள் வேத வைத்திய சாலை அதிபருமாகிய கோ. ந. முருகைய பண்டிதர் அவர்களால் தயார் செய்யப்பட்டு உலக பிரசித்தி அடைந்து வரும் ஔஷதங்கள்.

## மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்



மேலேகண்ட மேகராஜாங்க மதன விந்தாதி லேகியத்தை காலை மாலை இரு வேளையாக ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவதினால், 20 வகை மேகத்தை போக்கி திரேகத்தை பசும் பொன் போல் செய்வது மன்றி, சிலேற்பனம் 96ம் கிரந்தி, அரையாப்பு, சூலை, க்ஷயம், ஈளை இருமல், மந்தாரகாசம், காமாலை, சோகை, பாண்டு, குன்மம் 8-ம் கிரிச்சனங்கள் 6-ம் வாய்வு 26ம் பித்தம் 40-ம் இலிங்க புற்று, ஸ்திரிகளுக்கு யோனி புற்று, வெள்ளை, மஞ்சள் வெள்ளை, பிர மேகம் சொறி கரப்பான், மேக ஊறல், தண்டில் புண், கண்ட மாலை, மகோதிரம், நீராமை, கவுசி, உளமாந்தை, அஸ்திஜுரம் அஸ்திவெட்டை, உஷ்ண வாய்வு அரோசகம், அன்னத்துவேசம் வாந்தி, விக்கல், கால்கை எரிவு, பெரும்பாடு, எலும்பு புருக்கி நோய், மூல வாயுவு, மூலத்தில் ரத்தம், கரு கிருப்பு மயக்கம், நித்திரை, ஸ்திரிகளுக்கு கெற்ப நோய் 7ம் ஸ்திரிகள் மலடியாயிருந்தால் கெற்பம், நீரடைப்பு, சதையடைப்பு, துர்மாங்கிச அடைப்பு, சிதக்கடுப்பு, முதலான கொடிய ரோகங்களை சுகப்படுத்தி தேகம் சிவந்து யின்னும் இந்திரியம் இறுகி கட்டும் இதை வியோதியர்கள் சாப்பிட்டு வருவார்களானால் ஜீவாதார நரம்புகள் முறுக்கேறி தாது விர்த்தியையும் ஆண்மையையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் ஆனந்த சுகத்தையும் கொடுப்பதில் இதற்கு நிகரான லேகியம் வேறேயில்லை யென்று உறுதியாய் கூறுகிறேன். ஆண் பெண் யாவர்களும் சாப்பிடலாம் ஒரு தரம் வாங்கி அநுபவிப்பீர்களானால் இதன் உண்மை நன்கு விளங்கும். பத்தியமில்லை.

48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் சேர் 1-க்கு விலை 5-0-0

24-நாள் „ சேர் ½-க்கு விலை 2-8-0

12-நாள் „ சேர் ¼-க்கு விலை 1-4-0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

---

குணத்திற் சிறந்தது! விலை குறைந்தது!! பரிமளமிகுந்தது!!!

## சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

மேலே கண்ட சுகந்த பரிமளாதி ஸ்நானத் தைலத்தை ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்து வருவதாலும் நித்தியம் தலையில் தடவி தலைவாரி வருவதினாலும் தீரும் வியாதிகள், மேகம், நீர்வீவு, நீர் எரிச்சல், கிரிச்சனம், க்ஷயரோகம், கண்ணெரிவு, கண் புகைச்சல், கைகாலெரிவு, பிரமேகம், ரணம், கிரந்தி கற்றாளை நாத்தம், அஸ்திஜுரம், அஸ்தி வெட்டை, உள் வெட்டை, தாது நஷ்டம் பித்தத்தாலுண்டாகும் மயக்கம் புண் புரை முதலானவைகளும் குழந்தைகள் முதல் ஆண் பெண் யாவர்களும் தலைக்கு பத மிட்டு வாரி வந்தால், தலையில் மேகத்தினாலுண்டாகும் பொடு அதினால் சகிக்க முடியாத அரிப்புண்டாகி கோதுமை தவிடுபோல் உதிருகின்றதும் மாறிப்போகும். இந்த தைலமானது எங்கள் முன்னோர்களால் கையாண்டு வந்ததும் என் அநுபவத்துக்கு வந்து ஆயிரக்கணக்கான ரோகிகளுக்கு சகல வியாதிகளையும் சவுக்கியப்படுத்தி இருக்கிறேன். மேற்படி சுகந்த பரிமளாதி ஸ்நான தைலமானது யாதொரு நோய் வாராமல் பாது காப்பதோடு ராஜ கருவியாகிய மூளைக்கு குளிர்ச்சியையும் கண்களுக்கு பூரண சந்திரன் போன்ற குளிர்ந்த பிரகாசத்தையும் திவ்விய தேஜஸ்ஸையும் ஞாபக சக்தியையும் உற்சாகத்தையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. பத்தியமில்லை.

☞ 24-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 5—0—0 ☞ 12-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 2—8—0

☞ 6-அவுன்ஸ் கோண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

---

## வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை.

மேலேகண்ட கஸ்தூரி வாய்வு குளிகையானது தங்கம், வெள்ளி, முத்து, பவளம் தாம்பிரம் முதலானவைகளாலும் உயர்ந்த சரக்குகளாலும் பெரும்பாலும் சாஸ்திர ரீதியாய் மிக்க பிரையாசையுடன் யாவரும் எளிதிலடையும்படி சித்தம் செய்யப்பட்ட இந்த கஸ்தூரி வாய்வு குளிகையை உபயோகித்து வருவதினால் உஷ்ணத்தினாலுண்டாகும் வாய்வு, மாரடைப்பு, இடுப்புவலி, வயற்றுப்பிசம், நீர்கட்டு, பெண்களுக்கு கெற்பபையிலுமுள்ள ரணம், அதனால் சீவுண்டாகி வயற்றில் குத்தல், வெள்ளை விழுதல், சகிக்க முடியாத வயற்றுவலி, இவ்வித வியாதிகளுக்கு இங்லீஷ் வைத்தியர்கள் வயிற்றை ஆப்பிரேஷன் செய்து பார்க்காமல் நிவர்த்தி செய்ய முடியாதென்று முடிவு சொன்ன வியாதிகளை அநேகர்களுக்கு எங்களுடைய வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகையினால் நாலு ஐந்து வேளையில் பூரண சொஸ்தப்படுத்தி அதனால் பரிசுகளும் மெடல்களும் சங்கிலி முதலானதும் பெற்றிருக்கிறேன்.

மேல்கண்ட வசந்த குஸுமாகர கஸ்தூரி வாய்வு குளிகை அற்புத குண முடையன என்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

☞ 12-மாத்திரை கோண்ட சீசா 1-க்கு விலை 1—4—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

உபயோகப்படுத்தும் விபரம் மருந்துடன் அனுப்பப் படும்.

☞ ஏஜண்டுகள் தேவை தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மருந்து கிடைக்குமிடம்:—

**பழனிவேல் பிள்ளை,**

சோல் ஏஜண்டு, பெரியகடை வீதி, கோயமுத்தூர்.

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது.

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை நினைத்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



இங்கிலீஷ் படிக்க அவலுடன் எதிர்பார்த்திருந்த அன்பர்களே! ஏன் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்!!

23000 ஜனங்களுக்கு ஆங்கிலம் விரைவில் கற்றுக்கொடுத்தது இப்புத்தகம் ஒன்றேதான்!!!

7-ம் பதிப்பு] [7-ம் பதிப்பு

7000-பக்கங்கள் கொண்ட முழு கலிகோ பயிண்டு புத்தகம் விலை ரூ. 2. ஸ்ரீராமர் சீதா திருக்கலியாண படமும், பட்டாபிஷேக ஆப்டோன் படமும் உள்ளது.

## "ஆங்கில ஆசான் அல்லது போதினி"

எமது ரிஜிஸ்டர்ட் "லேடி டிரேட் மார்க்கு" போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்! மோசம் போகாதீர்கள்.



தமிழ் தெரிந்தவர்கள் ஆங்கில பாஷையை ஆசிரியர் இல்லாமலே அதி சீக்கிரத்தில் பணச் செலவின்றி சுயமாகவும், சுலபமாகவும் கற்றுக்கொள்ளலாம். உலக அனுபவத்திற்கு வேண்டிய பல விவகாரங்களின் பதங்களைப் படிப்படியாக நூதன பாட முறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. கிராம முன்சிப், கர்ணம், கான்ஸ்டேபில்கள், கங்காணியர்கள், பட்லர்கள் முதலிய எல்லா தொழிலாளர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

23000-காப்பிகள் இது வரையில் செலவழிந்திருப்பதே இதன் பெருமையையும் இன்றியமையா உபயோகத்தையும் விளக்கிக்காட்டும். எல்லா ஊரிலும் எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும். எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

**தி. இராஜகோபால் முதலியார்,**
302, தங்கசாலைத் தெருவு, மதராஸ்.



குடியர்களை குணமாக்கும் அற்புத

## "விக்கோரின்"

"விக்கோரினை" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின் போருக்கும் தொயாமல் கொடுத்து வருவதில் குடியையும் அபினியும் ஆயுளுள்ளவும் விட்டு விடுகிறார்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம். கடந்த 12 வருஷங்களாக ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது. பத்தியமே கிடையாது. 12, 18, 25 வருஷக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. தேகத்திற்கு எவ்விதமான கெடுதியும் செய்வதேயில்லை. குடியர்கள் தெரிந்தும் "விக்கோரினை" சாப்பிடலாம்.

40-நாள் "விக்கோரின்" விலை ரூபாய் மூன்று.

ஆங்லோ இண்டியன் டிரக்கஸ் கம்பெனி,
கோயமுத்தூர், தெ. இந்தியா.



இனம்! இனம்!!

## ரகஸ்யரத்னம்

அல்லது

**வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.**

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபால் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபால் பெட்டி 222, மதராஸ்.

கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

## அயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான வேலைக்காரர்களுக்கும் உஷ்ணதிரேகி, மாணுக்கர், வக்கீல், ஜட்ஜுகள் முதலியோர் பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.



TRADE MARK.

கண்ணெரிவு, கண் சிகப்பு, கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக் குறைவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திகாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க்கட்டுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருத்தலைவலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல் செம்பட்டை, ஆரம்ப நரை, தேகநாற்றம், முதலிய வியாதிகளைப் போக்கி உரோமத்தை கருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.

12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இரு முறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| 40 வகை பித்தத்திற்கும் ஜீரக ரசாயனம் 2-சேர் | ரூ. 2—0—0 |
| இரத்த விருத்திக்கு வீரிய தாது லேகியம் 1-சேர் | ரூ. 2—0—0 |
| பாலர் ரக்ஷணி சாந்த வகை மாத்திரை 200-க்கு | ரூ. 2—0—0 |
| சுக பேதி மாத்திரை அல்லது இரா பேதி 100 மாத்திரை | ரூ. 1—0—0 |
| சுக பேதி பவுடர் 100 வேளைக்கு | ரூ. 1—0—0 |
| ஓம சத்து அரை அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 1—0—0 |
| காலரா சஞ்சீவி திராவகம் 1-அவுன்ஸ் புட்டி 1க்கு | ரூ. 2—0—0 |
| காது நோய்க்கு கர்ண பிந்து 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு | ரூ. 1—0—0 |
| சோகை பாண்டுகளுக்கு அய காந்த சத்து 40 வேளைக்கு | ரூ. 1—0—0 |

குறிப்பு:— இன்னும் எல்லா வியாதிகளுக்கும் கை கண்ட மருந்துகள் நேரிலாவது தபால் மூலமாவது பெற்றுக் கொள்ளலாம். எனது தரும வைத்திய சாலையில் இவ் வருடம் 15000 வியாதியஸ்தர்களுக்கு மருந்து கொடுத்து சகல வியாதிகளையும் குணப்படுத்தி இருக்கிறேன். திருச்சியிலே பிரபல தன வந்தர்களின் குடும்பங்களுக்கு குடும்ப வைத்தியராக இருந்து வருகிறேன்.

டாக்டர். ஜி. எல். சாமி,


சத்திய வேத வைத்தியசாலை, வாகநேரி—திருச்சினாப்பள்ளி.

---

இனாம்! இனாம்!

### உயர்ந்த விசித்திரமான 15 சாமான்கள் கொடுக்கப்படும்.

அமெரிக்கா தேசத்தில் சித்திர வேலைகளுடன் தயார் செய்யப்பட்ட 18 காரட் கோல்டு பிளேடெட் ரிஸ்லெட் கெடியாரம் தற்கால நாகரீகத்துக்கேற்ற மனோரம்மியமான பலவித விசித்திர பட்டைகள் தீர்த்து பள பளப்பான டயலும் உள்ளது. நெடுநாளைக்கு உழைக்கக்கூடியது. உரத்த சாமான்களால் செய்யப்பட்டது. இக் கெடியாரம் தருவிப்பவர்களுக்குக் கீழ்கண்ட சாமான்கள் இனாம்: மோதிரம் 1, கூந்தல் எண்ணெய் புட்டி 1, பட்டர் பின் 1, பொத்தான் 4, உயர்ந்த கைகுட்டை 1, தந்த சீப்பு 1, செண்ட் பாட்டல் 1, பிரேஸ்லெட் 1, சிகரெட் கேஸ் 1. சேப்டி பின் செட் 1, விசித்திர பொம்மை 1. கெடியாரம் விலை 7—12—0



விலாசம்:-எஸ். ஆர். கிருஷ்ணு அண்டு கம்பெனி, நெ. 1 தம்புநாயக்கன் தெருவு மதராஸ்

---

## சமத்துவ ஊழியன்.

ஓர் சிறந்த தேசீயத் தமிழ் மாதப் பத்திரிகை

அதிகாரமும், அகங்காரமும், பணத்திமிரும், ஜாதி இறுமாப்பும் படைத்துள்ளவர்களின் அக்கிரமங்களைக் கண்டித்துத் திருத்தி பாரத மக்களிடத்திலே சமத்துவத்தைநிலை நாட்டுவான் போராடுவதற்கென, வெளிவருவது.

வருட சந்தா தபாற்செலவுடன் ரூ. 2

வீ. அருணாசலம்,

நெ. [illegible] செட்டித் தெரு, கொழும்பு.

---

## பிரமேக குல சம்ஹாரி.

பலவித காந்தித் தடிப்புகள், 21 விதமேக ரோகம், 7-வித வெள்ளை ரோகம், சணம் அரையாப்பு, சூலை, வாதம் முதலிய கோர கொடிய ரோகங்களையும் ஐந்தே தினத்தில் நீக்குகிறது. புட்டி 1-க்கு ரூ. 2. ஏஜண்டுகள் தேவை. கேட்லாக் இனாம்.

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,

திருச்செங்கோடு. (தென் இந்தியா)

---

## இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்." கோயமுத்தூர்.

| | |
|---|---|
| காப்பு திரவியம் | —ரூ. 2,706. |
| மூல திரவியம் | — ரூ. 5,00,000. |
| வெளிவிடப்பட்டது | — ரூ. 69,100, |
| வசூலிக்கப்பட்டது | —ரூ. 43,890. |
| டிபாசிட்டுகள் | ரூ. 62,580-1-0. |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்சேட் டிபாசிட்டு

இரண்டு வருஷ, கெடுவு வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0

இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்சேட் டிபாசிட்டு.

ஒரு வருஷ கெடுவு, வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0

வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டிகொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-௳ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினாலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,

31—5—26. மானேஜிங் டைரக்டர்

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.